விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 03 ஞாயிற்றுக்கிழமை (19.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 244

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# ஜனாதிபதி மகிந்த-மன்மோகன் ஈரானில் சந்திக்க வாய்ப்பு

## ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஈரானில் அடுத்த வாரம் சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. எனினும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.குழு 14இல் வருகை

(கொழும்பு)

ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவை அதிகாரிகள் குழு அடுத்தமாதம் 14ஆம் திகதி வரவுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஐ.நா.மனிதவுரிமை ஆணையாளர் பணியக அதிகாரிகளை இலங்கை மனிதவுரிமைகள் நிலையை நேரில் பார்வையிடுவதற்கு அனுமதிக்க முடியாது என்று அரசாங்கம் இதுவரை கூறிவந்தது. (20ஆம் பக்கம் பார்க்க)

## கட்சிக்கு விரோதமாக மைத்திரிபால செயற்பட்டார்


### மங்கள குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கட்சிக்கு விரோதமாகவே செயற்பட்டதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

1994ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

மைத்திரிபாலசிறிசேன, முன்னாள்ஜனாதிபதி சந்திரிகா பண்டார (20ஆம் பக்கம் பார்க்க)




## ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த மூவர் வெள்ளவத்தையில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

வெள்ளவத்தை – ராமகிருஷ்ணன் வீதியில் டெரெஸ் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. கொழும்பு வெள்ளவத்தையில் சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஹட்டன் கொட்டகலை டெரிக்கிளயர் தோட்டத்தைச் சேர்ந்த குமாரசாமி என்ற 60 வயதுடைய குடும்பஸ்தர், அவரது 56 வயதுடைய மனைவி பூபதி, மற்றும் 23 வயதான மகள் அமிர்தப்பிரியா ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்தவை தடுக்க புலி ஆதரவாளர்கள் முயற்சி

### திவயின தகவல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந் கொள்ளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிர்ப்பை வெளியிட புலி ஆதரவாளர்கள் ஆயத்தமாகி வருவதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது. எதிர்வரும் செப்டம்பர் மாதம் அமெரிக்கா வின் நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 28ஆம் திகதி ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றுவார் என எதிர் பார்க்கப்படுகிறது. எனினும் ஜனாதிபதியின் அமெரிக்க விஜயத்தை தடுத்து நிறுத்த (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு அதிகாரத் தீர்வினை வழங்க அரசாங்கம் ஒரு போதும் தயாரில்லை

### சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

ஜெனிவாத்தீர்மானத்தில் தமிழ் மக்களுக்கு அதிக பட்ச அதிகாரத்தை உள்ளடக்கிய அரசியல் தீர்வை வழங்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும், இலங்கை அரசாங்கம் அதிகாரத் தீர்வு எதனையும் தமிழ் மக்களுக்கு வழங்க தயாராகவே இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு சித்தாண்டி முருகன் ஆலய முன்றலில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஜெனிவாவில் தனக்கெதிராக நிறைவேற்றப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணையாளருடன் ஸ்ரீ.மு.க. சந்தித்துப் பேச்சு

(மட்டக்களப்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் நிலவும் அரசியல் விவகாரங்கள் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரியவை சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பொது செயலாளர் ஹசன் அலி மற்றும் தேர்தல்கள் ஆணையாளருக்கு இடையில் குறித்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தற்போது உள்ள சகலவிதமான (20ஆம் பக்கம் பார்க்க)

# கருணாநிதியும் போர்க்குற்றவாளி
## சீமான் முழக்கம்



(சென்னை)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சோனியாவுக்கு இணையான போர்க்குற்றவாளி கருணாநிதி நீங்கள் விலகியிருந்தால் காங்கிரஸ் ஆட்சி வீழ்ந்து சர்வதேச பார்வையே தமிழன் பக்கம் திரும்பியிருக்கும். அதை தவறவிட்ட வரலாற்றுத் துரோகி கருணாநிதி என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறினார்.

ஈழம் எமக்கு அரசியல் அல்ல.... அவசியம் என்ற தலைப்பில் நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற நாம் தமிழர் கட்சியின் பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய சீமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

சமீபத்தில் சென்னையில் கலைஞர் கருணாநிதி கூட்டிய டெசோ மாநாட்டில், ஈழத்தில் நடந்த தமிழினப் படுகொலை பற்றியோ அல்லது அந்தப் படுகொலைக்கு காரணமான ராஜபக்ஷ உள்ளிட்டவர்களை தண்டிக்க வேண்டும் என்றோ ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றாதது ஏன்? என்று கேள்வி எழுப்பினார்.

இன்றைக்கு ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமைக்காக டெசோ மாநாட்டைக் கூட்டும் கருணாநிதி, அங்கு தமிழினம் கொன்றொழிக்கப்பட்ட போது அதைத் தடுத்து நிறுத்திட செய்தது என்ன?

தமிழர்களுக்கு எதிராக ராஜபக்ஷ நடத்திய அந்தப் போருக்கு முழு அளவிற்கு உதவிய நாடு இந்தியா. அதன் ஆட்சிப்பீடத்தில் இருந்த கட்சி காங்கிரஸ். அந்தக் கட்சியின் தலைமையில் இருந்த மத்திய ஆட்சியில் அங்கம் வகித்தது தி.மு.க. எனவே இலங்கையில் தமிழினம் அழிக்கப்பட்டதற்கு ராஜபக்ஷ காரணமென்றால், அதே குற்றத்தை செய்த மத்திய காங்கிரஸ் அரசும் அதற்குத் துணை போன கருணாநிதியும் குற்றவாளிகளே.

தமிழ் நாட்டின் முதல்வராக இருந்த போது, திருமாவளன் நடத்திய மாநாட்டு சுவரொட்டிகளில் இருந்த ஈழம் என்ற வார்த்தையை பொலிஸை பயன்படுத்தி அழித்த கருணாநிதி, இன்றைக்கு ஈழம் என்று கூறி தான் மாநாடு நடத்துகிறார் என்றால் அதற்குக் காரணம் ஈழத் தமிழர் பிரச்சினையை கையில் எடுக்காமல் தமிழ்நாட்டில் அரசியல் செய்ய முடியாத நிலை உள்ளதே.

போர் நடந்த போது காயமுற்ற மக்களுக்கு கொண்டு செல்லப்பட்ட குருதியை பொலிஸை ஏவி தடுத்து நிறுத்தியவர் கருணாநிதி. மருந்து பொருட்கள், மண்ணெண்ணெய் என்று எந்த பொருளும் ஈழத்திற்குச் செல்லாமல் தடுத்தவர் கருணாநிதி.

இந்த இடத்தில் நான் ஒரு உண்மையைச் சொல்லியாக வேண்டும். ஜெயலலிதா ஆட்சியில் இருந்த போது இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏதுமில்லை என்றும், குருதி முதல் மண்ணெண்ணெய் வரை நாட்டிற்கு கொண்டு வருவதில் எந்தச் சிக்கலும் இருந்ததில்லை.

இதனை பிரபாகரனே என்னிடம் தெரிவித்தார். இப்படி ஆட்சியில் இருந்தால் பதவியை காப்பாற்றிக் கொள்ள ஈழத் தமிழர்களைக் காட்டிக் கொடுப்பதும், ஆட்சி போன பிறகு அரசியலிற்காக ஈழத் தமிழர் பிரச்சினை பற்றி பேசுவதும்தான் கருணாநிதியின் அரசியல் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டின் முதல்வராக 5 முறை கருணாநிதி இருந்தாரென்றால் அதற்கு அவருடைய அரசியல் வலிமையோ அல்லது திறனோ காரணமல்ல. தமிழ்நாட்டு மக்களின் அறியாமையே காரணம். அந்த நிலையை நாம் தமிழர் கட்சி மாற்றிவிட்டது.

அதனால்தான் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. தோற்று ஆட்சியை இழந்தது. அது மீண்டும் ஆட்சிக்கு வராது. வரவும் விடமாட்டோம் என்று சீமான் பேசினார். (எ-11)

# தீயில் கருகி பெண் மரணம்

(மிருசுவில்)

மிருசுவில், கிளாலி மாதாங்கோயில் பகுதியில் எரிகாயங்களுக்குள்ளான பெண் ஒருவர் உயிரிழந்தார். அவரது கணவர் ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தினைச் சேர்ந்த ஜெசுதாஸ் சுதா (வயது 30) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார். அவரது கணவரான எஸ். ஜெசுதாஸ் (வயது 34) என்பவர் படுகாயமடைந்தார். தீக்காயத்திற்கு உள்ளான இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்நிலையில் மனைவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

நேற்றுக் காலை 8.00 மணியளவில் சமையலறைப் பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட தீயினாலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸ் விசாரணை நடைபெற்றதாக தெரியவருகின்றது. (எ-85)

# சிகிச்சை பலனின்றி முதியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் சுகவீனம் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

3ஆம் கட்டை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கணபதி நகுலேஸ் (வயது 77) என்ற வயோதிபரே உயிரிழந்தவர் ஆவார். (எ-11)

# பொலிஸ் - வாகனச்சாரதி முறுகல் விசாரணைகள் தொடர்கின்றன

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயத்தில் பொலிஸ் மற்றும் வாகனச் சாரதிக்கிடையில் ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்பில் விசாரணையை மேற்கொண்டு வருவதாக யாழ் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர்த் தேர்த்திருவிழாவான கடந்த 16ஆம் திகதி பிற்பகல் 2.10 மணியளவில் கந்தர்மடம் சந்தியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் ஒருவருக்கும் வாகனச் சாரதிக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து பொலிஸார் வாகனச் சாரதியை தாக்கியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வாகனச் சாரதியை பொலிஸ் தாக்கியது தொடர்பில் விசாரணை செய்து வருகின்றோம். ஆனால் தங்கச் சங்கிலியை பொலிஸ் அறுத்துக் கொண்டு ஓடியதாகக் கூறப்படுவது முற்றிலும் பொய்யானது.

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் உள்ள உறவினை முறிக்கும் வகையில் அது வேண்டுமென்றே தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டு.

இதனை பொலிஸாராகிய நாம் முற்றாக மறுக்கின்றோம். இருப்பினும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)


## ஆட்கள் தேவை

1. கர்சாளர் (ஆண்கள் இருவர், முன் அனுபவம் விரும்பத்தக்கது)
2. விற்பனையாளர்கள் (ஆண், பெண் பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

நல்லி சில்க்ஸ்

121, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

021 222 5573

(எ-775)



## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 | 16 |
| 07 | 08 |
| 1954 | 2012 |

அமரர் பழனிநாதர் தங்கவடிவேல் (வரதன்)

(ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்)

எமது ஆலய பரிபாலன சபையின் உறுப்பினர் ப. தங்கவடிவேல் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குவதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பரிபாலன சபை,

வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயம்.

(C-790)


# மணற்காட்டு சவுக்குக் காட்டில் தீ ஒரு கிலோ மீற்றர் காடு எரிந்து நாசம்

(வடமராட்சி)

யாழ்ப்பாண வடமராட்சி, மணற்காடு பகுதியில் அமைந்துள்ள சவுக்குமரக் காட்டுப் பகுதியில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை தொடக்கம் தீப் பரவல் ஏற்பட்டு வருவதாக நிலையத்தின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

பரவி வரும் காட்டுத் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

தண்ணீர் பற்றாக்குறை காரணமாக தீயணைப்பு பணிகளில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மணற்காடு கிராம அலுவலர் தெரிவிக்கையில்,

தீ ஏற்பட்டதன் காரணம் குறித்து இன்னமும் அறியப்படவில்லை எனவும் தீயால் இதுவரை சுமார் ஒரு கிலோ மீற்றர் வரையான காடு எரிந்து கருகியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

சம்பவத்தை அடுத்து பிரதேச மக்களுடன் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட தீயணைப்பு முயற்சியின் பயனாகவே தீ ஓரளவாவது பரவாது தடுக்கப்பட்டதாகவும் இல்லையேல் முற்று முழுதாக எரிந்து சாம்பலாகியிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

# நாடு கடத்தப்பட்ட இளைஞன் விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

நெதர்லாந்தில் இருந்து நாடு கடத்தப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பரமநாதன் ஜெதருசன் என்னும் தமிழ் இளைஞனே இவ்வாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணை என்ற பெயரில் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

எனினும் இதுவரை எந்த நீதிமன்றத்திலும் குறித்த இளைஞனை ஆஜர்ப்படுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கடந்த 15ஆம் திகதி நாடு கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-11)


## 'EASY ENGLISH'

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம் (227)

புதிய வகுப்பு : 31.08.2012 / Phone : 773 212 711

## COMPUTERS FOR SALE

Tel : 021-222 4459, 0772533390

HP Branded, Intel Processor 3.2 GHz, Intel Mother Board, 1GB DDR-II Ram, 80GB Sata Hard Disk, DVD Combo, ATX Casing, 15" HP LCD Monitor, Keyboard, Optical Mouse, Speaker, Webcam, இவை அனைத்தும் Rs.22,750/= மட்டுமே (1 வருட உத்தரவாதம்)

### COMPUTER ACCESSORIES FOR SALES

Huawei Multy Dongle : 7.2mbps From, 3550, 21.1 mbps 5250, Webcam from: 750, Kingston Pendrive: 4GB-1000, 8GB-1250, Casing-2550, DVD Writer 2850, ATX Power Supply-1350, Kaspersky In Security: 1550, Optical Mouse: 350, Keyboard-550, Woofer-1200, LCD Monitor from: 5400, Laptop Charger-1900.

(உங்கள் சகல விதமான கணனிகளையும் ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்)

North Lead Computer Sales & Services

328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)


# சைக்கிள் திருடன் நையப்புடைப்பு

(மிருசுவில்)

துவிச்சக்கர வண்டியைத் திருட முற்பட்ட திருடன் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு தாக்கப்பட்ட நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை யாழ் பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

ஹற்றன் நஷனல் வங்கிக்கு செல்வதற்காக நபர் ஒருவர் துவிச்சக்கர வண்டியை பூட்டாது விட்டுச் சென்றுள்ளார்.

இதை அவதானித்த திருடன் துவிச்சக்கர வண்டியை திருட முற்பட்டவேளை முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவர் குறித்த திருடனை துரத்திச் சென்று கையும் மெய்யுமாகப் பிடித்துத் தாக்கியுள்ளார். இதனால் படுகாயமடைந்த குறித்த நபர் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (எ-3,85)


## தவறிவிட்டது

மின்சார நிலைய வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் எனும் முகவரியை சொந்த இடமாக கொண்ட கண்ணதாசன் கஜிதா என்பவரது தே.அடையாள அட்டை இல.835644804V யாழ்ப்பாணத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. அத்தோடு இலங்கை வங்கி புத்தகம் மற்றும் அடகுச் சிட்டை ஆகியவையும் தொலைந்துவிட்டன. கண்டெடுத்தவர்கள் வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

தொடர்பு: 0770053181 (236)

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக்கழகமும் இணைந்து அமரர் க.வே.சரவணமுத்து (ஆசைப்பிள்ளை) ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழிகாட்டல் கருத்தரங்கும் பரீட்சையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-9)

# தங்கச்சங்கிலி அபகரிப்பு; சந்தேகத்தில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

இளவாலைப்பகுதியில் 78 வயது மூதாட்டியை கொலை செய்துவிட்டு தங்கச்சங்கிலியை அபகரிக்க முயன்றனர் என்ற சந்தேகத்தின் பேரில் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

குறித்த மூதாட்டி வீட்டில் தனித்திருந்த போது அவரை கிணற்றுக்குள் தள்ளிவிட்டு தங்கச்சங்கிலியை அபகரிக்க முற்பட்டபோது அயலவர்கள் இரு பெண்களையும் பிடித்து இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ-6)

# சிறப்புச்சொற்பொழிவும் பரிசளிப்பு விழாவும் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ கால இறுதி நாளாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை தெய்வீக பேருரையும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இத் தெய்வீக பேருரையில் காவல் தெய்வம் எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவை மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் ஆற்றுவார்.

அதனைத் தொடர்ந்து மஹோற்சவ கால சொற்பொழிவு நடைபெறும் காலங்களில் சமய அறிவுப் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம், கலை நிகழ்வுகள் என்பனவும் நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாணம் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-9)

## வாரம் ஒரு தகவல்

## இசையின் மகிமை

"நேற்றைய தினம் உங்களுடைய கச்சேரியைப் பார்ப்பதற்காக வந்தேன்!"

"அப்படியா... மிகவும் சந்தோசம்!"

"உங்களுடைய இசையைக் கேட்டவுடனேயே எனக்கு ஒரு ஆசை... அதை நீங்கள்தான் மறுக்காமல் நிறைவேற்றி வைக்க வேண்டும்!"

"எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள்... என்னால் முடிந்ததை நிறைவேற்றி வைக்கிறேன்!"

"எங்களுடைய வீட்டிற்கு நீங்கள் ஒரு தடவை கட்டாயம் வர வேண்டும்"

"நிச்சயம் வருவேன். இது நீங்கள் எனக்குக் கொடுக்கின்ற மரியாதை இல்லை... என்னிடம் இருக்கின்ற இசையின் லயத்தினால் கொடுக்கின்ற மரியாதை! உங்களைப் போன்ற ரசிகர்களின் வேண்டுகோளைப் பூர்த்தி செய்ய வேண்டியது என்னைப் போன்ற வித்துவான்களின் கடமை! இசையின் பெறுமதி இப்பொழுதுதான் எல்லோருக்கும் புரிய ஆரம்பித்துள்ளது!"

"அப்படியா சொல்கிறீர்கள்?"

"ஆமாம்! மன இறுக்கமென்று சொல்கின்றோமே (டென்சன்). அதை விரட்டியடிக்கக்கூடிய சக்தி இசைக்கு உண்டு. மனம் பதற்றமாக இருக்கின்றபோது உங்களுக்கு பிடித்த சங்கீதத்தைக் கேளுங்கள்... அப்போது இரத்த நாளங்கள் சீராக்கப்படும். ரென்சனில் இருந்து விடுபடலாம்.

அந்த இசையுடன் சேர்ந்து நீங்களும் இதமான குரலிலே பாடுங்கள்... அப்பொழுது மூளையினுடைய கவனத்தைச் சிதறடிக்காமல் ஒரு நிலைப்படுத்த முடியும். எப்பொழுதும் பாடிக் கொண்டே இருந்தால் மன இறுக்கம், பதற்றம், பயம் இது மாதிரியான உணர்வுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்! இவ்வளவும் நான் சொல்லவில்லை... மருத்துவ வல்லுநர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்"

"இதையெல்லாம் விட உங்களிடம் இருக்கின்ற சங்கீத ஞானத்தை இன்னுமொரு முக்கியமான காரியத்திற்கு உபயோகிப்பதற்கு ஆசைப்படுகின்றேன். நீங்கள் அவசியம் வர வேண்டும்...!"

"வந்து என்ன செய்ய வேண்டும்?"

"ஒருமணி நேரம் பாட வேண்டும்!"

"பாடினால்...?"

"பக்கத்து வீட்டுக்காரன் குடிபெயர்ந்து போய் விடுவான். நான் நிம்மதியாக வாழலாம்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## தொடரும் வரட்சியால் கால்நடைகள் அவதி

(பருத்தித்துறை)

வடமாராட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தை அடுத்து வரட்சி காரணமாக குடிநீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள கிணறுகள் மற்றும் குளங்களில் நீர்மட்டம் குறைவடைந்து இருப்பதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

குளங்கள், வாவிகளில் பல மாதங்களாக மழை பெய்யாத காரணத்தினால் குடிநீர் வற்றியுள்ளது.

இதனால் கால்நடைகள் குடிநீருக்காக அலைந்து திரிவதையும் அவதானிக்க முடிகிறது. (அ-3-10)

## லயன்ஸ் கழகத்தின் மாதாந்தக்கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் மாதாந்த அங்கத்தவர் கூட்டமும் சேவைத் திட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது பொதுமக்களுக்கான இலவச வைத்திய சேவைகள் மற்றும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் ஆகிய நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளன.

அதேவேளை, எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

எனவே, உறுப்பினர்களை தவறாது குறித்த நேரத்திற்கு கலந்து கொள்ளுமாறும் வடமராட்சி லயன்ஸ் கழக செயலாளர் லயன் க.மகிந்தன் அறிவித்துள்ளார். (அ-3-10)

## இராசி பலன்

19.08.2012

(ஆவணி 3 , ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

துதியை முன்னிரவு 8.13 மணிவரை

பூரம் முன்னிரவு 8.21 மணிவரை

இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

சுபநேரம் 9.05-10.35 மணிவரை

சித்தாமிர்தம்.

**மேடம்** சுயமுயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள், சுப காரியப்பேச்சுக்கள் முடிவாகலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வியாபார விருத்தியுண்டு.

**இடபம்** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், எந்தக்காரியத்தையும் எளிதில் செய்து வெற்றி காண்பீர்கள், பணி புரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், புதிய பொருட் சேர்க்கையுண்டு, அந்நியர்கள் சந்திப்புண்டு, தொழில் நன்மையுண்டு, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு,ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**கடகம்** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், தொலை தூரத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையலாம்.

**சிங்கம்** ஆழ்ந்த சிந்தனைகள் ஏற்படலாம், நண்பர்கள் உதவ முன்வருவர், ஆலய வழிபாட்டில் கலந்து கொள்ள நினைப்பீர்கள், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும், அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள்.

**துலாம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பண வரவால் மகிழ்ச்சியடைவீர்கள், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வருவார்கள், வாகன சுகமுண்டு, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், போசன சுகமுண்டு.

**தனுசு** தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளை சந்தித்து முடிவெடுப்பீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கட்டுப்பாடுகள் உண்டாகும், உடல் ரீதியாக பெரிதும் பாடுபடுவீர்கள், திடீர் பயணங்கள் கைகூடும்.

**மகரம்** எதிர்பாராத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலத்தில் சற்று தளர்வுகள் ஏற்பட இடமுண்டு, தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**கும்பம்** விட்டுச் சென்ற உறவுகள் விரும்பி வந்து சேரும் நாள், கோயில் வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கனவுகள் நனவாகலாம், களஸ்திர சுகமுண்டு, புதிய பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**மீனம்** நல்லவரின் தொடர்பால் நலம் காணும் நாள், அலுவலகப் பணி துரிதமாகும், ஆரோக்கியம் சீராகும், காரியங்கள் கைகூடும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், சுவாரஸ்யமான நாள்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 65 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 90 |
| தக்காளி | 60 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 70 | 60 | 80 |
| கரட் | 110 | 90 | 160 |
| பூசணி | 30 | 30 | 50 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 60 | 35 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 90 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 120 | -- | -- |
| பயற்றங்காய் | 60 | 90 | 50 |
| லீக்ஸ் | 110 | 100 | 130 |
| பீற்றூட் | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 70 | 70 | 100 |
| முருங்கைக்காய் | 110 | 110 | 70 |
| போஞ்சி | 100 | -- | 110 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 65 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 20 | 20-22 |

# சொந்த இடத்தில் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## மீள்குடியேற்ற அமைச்சரிடம் முள்ளிவாய்க்கால் மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள கோம்பாவில் கிராம சேவையாளர் பிரிவில் பிம்பிலி என்ற இடத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்வதாக கடந்த 16 ஆம் திகதி முல்லைத்தீவிற்கு விஜயம் செய்த மீள்குடியேற்ற அமைச்சரிடம் கண்ணீருடன் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு,

குறிப்பாக இப்பிரதேசத்தில் குடிநீர்த்தட்டுப்பாடு நிலவுகின்றது. மின்சாரத்திற்காக மின் பிறப்பாக்கி ஒன்று இக்கிராமத்திற்கு வழங்கப்பட்ட போதும் அதன் உதிரிப் பாகங்கள் பழுதடைந்தமையால் மின்சாரத்தைப் பெறமுடியாதுள்ளது.

முள்ளிவாய்க்கால் பாடசாலை இக்கிராமத்திலேய இயங்கி வருகின்றது. தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையில் ஆங்கில ஆசிரியர் இன்மையால் ஆங்கில மொழியைக் கற்க முடியாதுள்ளது.

வீதிகள் புனரமைக்கப்படவேண்டும். அத்தோடு இக்கிராமத்தில் அரச, தனியார் பேருந்து சேவை இன்மையால் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு நடந்து சென்று புதுக்குடியிருப்பிலேயே தமது பயணத்தை தொடர வேண்டியுள்ளது. அங்குள்ள மக்களில் எட்டுக் குடும்பங்களுக்கு காணி எதுவும் வழங்கப்படவில்லை

இறுதியாக தமது சொந்த இடமாகிய முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு ஆகிய இடங்களில் தம்மை மீள்குடியமர்த்துமாறும் வேண்டுகோள் விடுத்தனர். இவ்வாறான கோரிக்கைகளுக்கு பதிலளித்த மீள்குடியேற்ற அமைச்சர், குடிநீர்த் தட்டுப்பாட்டுக்கு ஒருவாரத்திற்குள் இராணுவத்தினரின் உதவியுடன் பவுசர் மூலம் நீரை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும். மின்சாரத்தை வழங்குவதற்காக மின் பிறப்பாக்கிக்கான உதிரிப் பாகங்களை நான் வழங்கி சீர் செய்வேன். ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறைக்கு கல்வி அமைச்சர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். மீள்குடியேற்றம் செய்யப்பட்டு எட்டு மாதங்களுக்கு மேல் இத்தனை தேவைகளுடனும் வாழ்வதை கவனத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த 206 குடும்பங்களே பிம்பிலி என்ற இடத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-267)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான அன்னதான சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் புதிய அங்கத்தவர்களை அங்கீகரித்தல், புதிய நிர்வாகிகள் தெரிவு என்பன நடைபெறவுள்ளதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் நாகன்.கிருஷ்ணபிள்ளை அறிவித்துள்ளார். (அ-9)

# கேரள கஞ்சாவுடன் இந்திய பிரஜை கைது

கேரள கஞ்சாவுடன் இந்திய பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இவரிடமிருந்து 6 கிலோ 900 கிராம் நிறையுள்ள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. நுரைச்சோலை முஸ்லிம் பள்ளிவாசலுக்கு அருகில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டபோது அவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவலுக்கு அமைய கல்விட்டி முகத்துவாரம் கடற்பகுதியில் இருந்து 34 கிலோ 600 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கேரள கஞ்சா விநியோகிப்பவர் என தெரிய வந்துள்ளது. சந்தேக நபர் குறித்து பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# அச்சுறுத்தலை எதிர்நோக்கும் வைத்தியர்களுக்கு பாதுகாப்பு

## பாதுகாப்பு செயலாளர் உறுதியளிப்பு

(கொழும்பு)

வைத்தியர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் குறிப்பாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் பேரவையின் உறுப்பினர்களுக்கு தேவையான பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அச்சுறுத்தல்களை எதிர்நோக்கும் வைத்தியர்களுக்கு கூடுதலான பாதுகாப்பு வழங்கப்படும்.

மேலும் அண்மையில் தெஹிவளையில் வைத்தியர் ஒருவரின் இல்லத்தின் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்தப்படும்.

இதேவேளை தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் கருத்துக்களை வெளியிட்ட வைத்தியர்கள் உள்ளிட்ட அனைவரினதும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் என பாதுகாப்புச் செயலாளர் வாக்குறுதி அளித்தார் என அரசாங்க வைத்திய அதிகாரிகள் பேரவையின் தலைவர் டாக்டர் அனுருத்த பாதெனிய தெரிவித்துள்ளார்.

தனியார் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு ஆதரவாக செயற்படும் சக்திகளே இவ்வாறு வைத்தியர்கள் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# பங்குச்சந்தை தலைவர் பதவிவிலகல்; சர்வதேச நாணய நிதியம் கவலை

கொழும்பு பங்கு பரிமாற்ற ஆணைக்குழு தலைவர் திலக் கருணாரட்னவின் பதவி விலகல் குறித்து சர்வதேச நாணய நிதியம் கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பங்கு சந்தையில் இருந்து குறுகிய காலத்துக்குள் மற்றும் ஒரு பலமிக்கவர் விலகியுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

பண பலமிக்க வர்த்தகர்கள் தொடர்ந்தும் மேற்கொண்டு வந்த அழுத்தங்களே தமது பதவி விலகலுக்கான காரணம் என்று திலக் கருணாரட்ன தெரிவித்தார்.

அவர் தமது பதவி விலகல் கடிதத்தை நேற்று முன்தினம் நிதியமைச்சின் செயலாளருக்கு அனுப்பியிருந்தார். எனினும் ஜனாதிபதி அதனை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கருணாரட்னவும் அவருடைய குழுவும் கொழும்பு பங்கு சந்தையை உரிய வகையில் நடத்திச் சென்றதாக சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கொசி மாத்தாய் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கொழும்பு பங்குச்சந்தையின் வர்த்தகத்தை உரிய முறையில் கொண்டு செல்ல வேண்டியது அவசியம் என்றும் மாத்தாய் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# குரங்கின் அட்டகாசத்தை கட்டுப்படுத்துவது யார்?

(சீவநகர்)

தென்மராட்சி பிரதேசம் கொடிகாமம் நகரத்தை அண்டிய பகுதிகளில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

பயன்தரும் பயிர் வகைகளை சேதமாக்குவதுடன் வீட்டின் ஓடுகளையும் சேதமாக்கி வருகின்றன.

குறிப்பாக பெண்களால் இக்குரங்குகளை துரத்த முடியாதுள்ளது.

துரத்தினாலும் மீண்டும் மீண்டும் அவை வந்து அட்டகாசம் புரிகின்றன. எனவே வனவிலங்கு பாதுகாப்புப் பிரிவினர் இவற்றை அங்கிருந்து அகற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)


HDFC GOLD LOAN

பொற் கடன்



உங்களது வீடமைப்பு வங்கியிடமிருந்து பெறுமதி மிக்க தங்கத்தைக் கொண்டு

- அதி கூடிய தொகைப் பணம் குறைந்த வட்டியுடன்
- அதி உயர் பாதுகாப்பு
- தங்க ஆபரணங்கள் நவீன தொழில்நுட்ப முறையினால் பரிசீலிக்கப்படல்
- உத்தரவாதமளிக்கப்பட்ட நம்பிக்கை
- நம்பகமானதும் நட்புறவுமான வாடிக்கையாளர் சேவை

*நிபந்தனைகளுக்குட்பட்டது

பாதுகாப்பு பெட்டக வசதி யாழ் கிளையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு

011 5737373

011 2356800

அல்லது அண்மையில் உள்ள HDFC வங்கிக் கிளையை நாடுங்கள்

HDFC BANK


www.hdfc.lk Email: hdfc@hdfc.lk

Fitch Rating - BBB+(lka)

(சு/783)

# யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களின் கலை ஆர்வம் கண்டு ஆச்சரியப்பட்டேன்

## திரை இசைப் பாடகர் உன்னிகிருஷ்ணன்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ளவர்களின் கலை ஆர்வம் கண்டு ஆச்சரியப்பட்டேன் என இந்திய கர்நாடக இசைப்பாடகரும் திரையிசைப்பாடகருமான ஸ்ரீ.பி. உன்னிகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் உள்ள கலைஞர்களுக்கு அவர்களின் திறமைகளை வெளிக்காட்டக்கூடிய களம் உள்ளது.

ஒரு கலைஞன் தனது திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்படுவது மிகவும் அவசியம்.

யாழ்ப்பாணத்திலுள்ள கலைஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கலை ஆர்வம் அதிகம் என்பதை முன்பும் நான் கேள்விப்பட்டுள்ளேன்.

வெளிநாடுகளில் நடைபெறும் பெரும்பான்மையான இசை நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்தவர்களே ஏற்பாடு செய்கின்றனர்.

அதனைவிட தற்போது யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்ததன் மூலம் அவர்கள் கலையின் மீது கொண்டுள்ள ஆர்வம் என்னை மெய்சிலிர்க்க வைத்துள்ளது.

கலையின் மீது அவர்கள் கொண்ட ஆர்வம் அவர்களின் முகத்தினுள் கண்டேன். ஆனால்,அவர்களின் திறமையை என்னால் கண்டுகொள்ள முடியவில்லை என்பது மன வருத்தமாகவுள்ளது.

கலையிலே திறமைவாய்ந்த பல ஜாம்பவான்கள் இங்கு வாழ்ந்துள்ளார்கள் என்பதை கேள்விப்பட்டுள்ளேன்.

இந்தியாவில் உள்ளவர்களை விட இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்திலுள்ளவர்களுக்கு கலையில் ஆர்வம் அதிகம்.

கலைத்துறையை வளர்த்தெடுக்க இங்கு இருக்கும் கலைஞர்களும் இந்தியாவில் இசை நிகழ்வுகளை நடாத்துவதற்கான சந்தர்ப்பங்கள் எதிர்காலத்தில் ஏற்படவேண்டும்.

எனக்கு கர்நாடக இசையில்தான் முதலில் அங்கீகாரம் கிடைத்தது. அதன்பின்பே திரைப்படப்பாடல்கள் பாடச் சந்தர்ப்பம் கிடைத்தது.

திரையிசைப் பாடல்களை நான் பாடத் தொடங்கியதும் கர்நாடக இசைப்பாடல்களை கேட்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றது.

இசைத்துறையில் நிலையான இடத்தினைப் பெற வேண்டும் என்றால் கடின முயற்சிவேண்டும். கர்நாடக சங்கீதத்தில் பல ஆயிரக்கணக்கான இராகங்கள் உள்ளன. இதற்குத் தேடலும் முயற்சியும் ஆர்வமும் இருக்க வேண்டும். நான் பல விருதுகளைப் பெற்றுள்ளேன். இருப்பினும் கலைமாமணி விருது எனக்குக் கிடைத்த அங்கீகாரமாகக் கருதுகிறேன். இது தவிர தேசிய விருதும் எதிர்பார்த்திருக்காத நிலையில் கிடைத்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

புதிய திறமையாளர்களின் வருகையும் காலத்திற்கு ஏற்ற மாற்றமும் தற்போது திரை இசைப் பாடல்களின் சவாலை மாற்றியுள்ளது.

இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான் போன்றவர்கள் மிகவும் திறமையான இசை அமைப்பாளர்கள் எப்பொழுதும் அவர்களின் இசையை ரசிக்க முடியும்.

இருப்பினும் தற்போது கடந்த காலங்களில் வெளியான பாடல்கள் போன்று வெளியாகுவது அரிது. எதுவும் நிரந்தரமல்ல. மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்று.

இங்குள்ள கலைஞர்கள், இசையில் ஆர்வம்கொண்டமாணவர்கள்தொடர்ந்து இசையை கற்க வேண்டும். அது கர்நாடக இசையாக இருக்கலாம். மேலைத்தேய இசையாக இருக்கலாம். எந்த இசையாக இருந்தாலும் தொடர்ந்து கற்று சாதிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)


## குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவைகள் (Parcel Service)

கனடா, லண்டன், சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே போன்ற நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் (சவுதி அரேபியா, குவைத், துபாய், டோகா கட்டார், பாகிறின்) குறைந்த கட்டணத்தில் சேவைகள்.

Canada - 1 கிலோ - 2600
London - 1 கிலோ - 1500 } மூன்று நாட்களில் ஒப்படைக்கப்படும்.
Canada - 1 கிலோ - 600
London - 1 கிலோ - 500 } ஏழு நாட்களில் ஒப்படைக்கப்படும்.

உங்கள் உணவு, உடை, அலங்காரப் பொருட்கள் CD, VIDEO, ALBUM - போன்ற பொருட்களை அனுப்பி வைக்கலாம்.

**Rainbow Travels**

கிழமையில் ஏழுநாட்களும் திறந்திருக்கும்

30/2, Third Lane,
Power House Road, Jaffna.
021 221 9596

(C-782)



## CANADAவில் குடும்பத்துடன் குடியேறுவதற்கான VISA ஒழுங்குகள்

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளமாணி முதுமாணிப் பட்டம் பெற்றவர்கள் குறுகிய காலத்தில் Canada செல்வதற்கு ஒழுங்குகள் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படுகிறது. அத்துடன் Nurses, Accountant, BioMedical Science Diploma முடித்தவர்கள் ஆகியோருக்கு குடும்பமாக (Family Visa)

**CANADA TOURIST VISA** அரசாங்கத்தில் பதிவு செய்து இலங்கையில் எப்பாகத்திலும் சொந்த வியாபாரம் செய்பவர்கள், 4 மாதங்கள் நன்கு பேணப்பட்ட வங்கி கணக்கு உடையவர்களுக்கு Canada வுக்கு Tourist Visa ஒரு மாத காலத்திற்குள் பெற்றுத் தர ஆலோசனை வழங்கப்படும்.

**CYPRUS -** நாட்டில் மேலதிக படிப்புக்கு செல்பவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் Visa ஒழுங்குகள். இவ்விசா மூலம் Paris, Swiss, Italy, Germany போன்ற நாடுகளுக்கு சென்று வரலாம். மொத்த செலவு 600,000 மட்டுமே.

**Rainbow Travels**

தொடர்புகள்
0778980652
0212219596

30/2, Third Lane,
Power House Road,
Jaffna.

(C-782)



## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-விசாகம் 2<br>உயரம்:-5'6"<br>கி.பா:-30, 1இல் செவ்<br>தொழில்:-சுயதொழில வியாபாரம்<br>B/308 | பிறப்பு:- 1978 இந்து<br>நட்சத்திரம்:- திருவோணம் 1.<br>உயரம்: 5'<br>கி.பா:-44.25<br>தொழில்:-பட்டதாரி ஆசிரியை<br>G/323 |
| பிறப்பு:- 1984 இந்து<br>நட்சத்திரம்:-உத்தரம் 3<br>உயரம்:-5'6"<br>கி.பா:-54.5, 7 இல் செவ்<br>தொழில்:-சொந்த வியாபாரம்<br>B/310 | பிறப்பு:- 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூரம் 2<br>உயரம்: 5'3"<br>கி.பா:-77<br>தொழில்:- வங்கி உத்தியோகம்<br>G/324 |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரம் 3<br>உயரம்:-5'5"<br>கி.பா:-31.75, 8 இல் செவ்<br>தொழில்:-ஜேர்மனி<br>B/309 | பிறப்பு:- 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அனுஷம் 4<br>உயரம்: 5'5"<br>கி.பா:- 42.5<br>தொழில்:- விரிவுரையாளர்<br>G/016 |
| பிறப்பு:- 1971 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூரட்டாதி 3<br>உயரம்:-5'8"<br>கி.பா:-15.25<br>தொழில்:- பட்டதாரி ஆசிரியர் (விவாகரத்தானவர்)<br>B/312 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அனுஷம் 3<br>உயரம்: 5'8"<br>கி.பா:-71, 7 இல் செவ்<br>தொழில்:-கணக்காளர்<br>G/048 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி

# டெசோ தீர்மான விளக்கக் கூட்டங்களை பல்வேறு இடங்களிலும் நடத்த ஏற்பாடு

## களத்தில் இறங்கினார் கருணாநிதி

(சென்னை)

டெசோ தீர்மான விளக்கப் பொதுக்கூட்டங்கள் நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை வரை 35 இடங்களில் நடைபெறவுள்ளது. அம்பத்தூரில் தி.மு.க. தலைவர் கருணாநிதி, திருநெல்வேலியில் பொருளாளர் ஸ்டாலின், கன்னியாகுமரியில் ராஜ்யசபா எம்.பி. கனிமொழி, மதுரையில் நடிகை குஷ்பு உட்பட முன்னணி பேச்சாளர்கள் பலர் பேசுகின்றனர்.

இம்மாதம் 12 ஆம் திகதி டெசோ மாநாடு சென்னையில் நடந்தது. அம்மாநாட்டில் இலங்கை தமிழர்கள் வாழ்வாதாரங்கள் மேம்பாடு குறித்தும் அவர்களின் வாழ்வுரிமைகளைப் பாதுகாக்க 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்தீர்மானங்களை தமிழகம் முழுவதும் உள்ள பட்டி தொட்டிகளில் வசிக்கும் பொதுமக்களிடம் சென்றடையும் வகையில் மாவட்ட தலைநகரங்களில் தீர்மான விளக்கப் பொதுக் கூட்டங்கள் தமிழகம் முழுவதும் நடத்த வேண்டும் என மாநாட்டில் தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியிருந்தார்.

இதையடுத்து இம்மாதம் 24 ஆம் திகதி அம்பத்தூரில் கருணாநிதி மறுநாள் கோவை மற்றும் 26 ஆம் திகதி திருப்பூர் ஆகிய இரு இடங்களில் அன்பழகன், 26 ஆம் திகதி திருநெல்வேலியில் ஸ்டாலினும் பேசுகின்றனர். இதற்கு முன்னதாக 21 ஆம் திகதி வேலூரில் நடிகர் வாகை சந்திரசேகர், மறுநாள் கடலூரில் வி.பி. துரைசாமி, 23 ஆம் திகதி தர்மபுரியில் துரைமுருகனும் மதுரையில் குஷ்பு மற்றும் 25 ஆம் திகதி கன்னியாகுமரியில் கனிமொழி உட்பட முன்னணி பேச்சாளர்கள் 35 பேர் பொதுக்கூட்டத்தில் பேசுகின்றனர். இதற்கான அறிவிப்புப்பட்டியலை தி. மு.க. வெளியிட்டுள்ளது.

டெசோ மாநாடு மற்றும் ஆய்வரங்கத்தில் மத்திய அமைச்சர் அழகிரி பங்கேற்றார். ஆனால் டெசோ தீர்மான விளக்கப் பொதுக்கூட்டங்களில் பேசுவதற்கு அழகிரி, மத்திய அமைச்சர் நெப்போலியன் ஆகியோர் இடம்பெறவில்லை.

அதேபோல் டெசோ குழுவில் இடம்பெற்ற சிலரும் பேச்சாளர்கள் பட்டியலில் இடம்பெறவில்லை என்று அதிருப்தியும் அக்கட்சியில் எழுந்துள்ளது. (அ-2)

# போதனிக்காட்டுப்பகுதியில் நிலச்சரிவு; இருவர் பலி

## எண்மரைக் காணவில்லை

கேரள மாநிலத்தில் அமைந்துள்ள கொச்சி மாவட்டம் கோதமங்கலம் அருகில் உள்ள போதனிக்காடு பகுதியில் நேற்று முன்தினம் பெரிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் 8 வீடுகள் முழுமையாக சேதம் அடைந்தன. பலர் காயம் அடைந்தனர். நிலச்சரிவால் அந்த பகுதியில் காணாமல் போன 8 பேரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

இப் பகுதியில் நேற்று முன்தினம் முதல் பெய்துவந்த பலத்த மழையினால் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. தொடர் மழையினால் மீட்புப் பணி பாதிக்கப்பட்டு இருப்பதால் மாவட்ட நிர்வாகம் கப்பல் படையை உதவிக்கு அழைத்து உள்ளது. (அ-2)

பாரதச் செய்தி

# அவதூறு வழக்கை சந்திக்க தயார்

## மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு

முதலமைச்சர் ஜெயலலிதா என் மீது அவதூறு வழக்குகள் தொடர்ந்துள்ளார். இந்த வழக்குகளைச் சந்திக்க நான் தயாராகவே உள்ளேன். சம்மன் வந்தால் அதை வேண்டாம் என்று சொல்லாமல் வாங்கிக்கொண்டு வழக்கைத் தைரியமாக சந்திப்பேன் என தி.மு.க.பொருளாளர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.


ரம்ழானை முன்னிட்டு இஸ்லாமிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பெரம்பூரில் உள்ள ஆர்.கே. மஹாலில் நடந்தது. தி.மு.க.பொருளாளர் மு.க. ஸ்டாலின் பங்கேற்று சுமார் ஆயிரம் ஏழை -எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அவர் உரையாற்றுகையில்,

சென்னை மாநகராட்சி செயல் இழந்துவிட்டது.கொசு, ஈ அதிகம் உருவாகி நோய் பரவிவிட்டது என்று பேசியதற்காக வழக்குப் போட்டிருந்தால்கூட பரவாயில்லை. மக்கள் பிரச்சினையை விட்டுவிட்டு கொடநாடு பற்றி விமர்சனம் சொன்னதற்காக வழக்குப் போடுகிறார். எந்த வழக்கையும் நாங்கள் சந்திக்க தயாராக உள்ளோம் என அவர் பேசினார். (அ-2)

# அசாமில் மீண்டும் கலவரம்; ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு

(பிரதிகவுகாத்தி)

அசாம் மாநிலத்தில் கடந்த மாதம் பூர்வீக போடோ பழங்குடி இன மக்களுக்கும் வங்கதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக வந்து குடியேறியுள்ள முஸ்லிம்களுக்கும் மோதல் ஏற்பட்டது. அந்த மோதல் 4 மாவட்டங்களில் பரவி மிகப் பெரும் இன கலவரமாக வெடித்துள்ளது.



இரு தரப்பினரும் கிராமங்களுக்குள் புகுந்து கொலை, தீவைப்பு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டனர். அதில் 77 பேர் கொல்லப்பட்டனர். பல நூறு கோடி ரூபாய் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. சுமார் 9 இலட்சம் மக்கள் வீட்டை விட்டு வெளியேறி அகதிகள் போல முகாம்களில் தங்கியுள்ளனர். கலவர பகுதிகளில் இராணுவம் குவிக்கப்பட்ட பின்னரே பதற்றம் தணிந்தது.

4 மாவட்டங்களிலும் இயல்பு நிலை திரும்பிக் கொண்டிருந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மீண்டும் கலவரம் வெடித்தது. சிறுபான்மை இனமக்கள் மீது அசிட் வீசப்பட்டது. இதையடுத்து இராணுவம் ரோந்து பணி தீவிரப்படுத்தப் பட்டுள்ளது. 4 மாவட்டங்களிலும் கலவரம் பரவாமல் இருக்க ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளது. இந்த நிலையில் மக்கள் அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்காக ஊரடங்கு உத்தரவு சிறிது நேரம் தளர்த்தப்பட்டது.

சிராங் மாவட்டத்தில் உள்ள சேல்கட்டி எனும் ஊரில் காசிம் அலி தன் மருந்தகத்தைத் திறந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். இதில் காசிம்அலி கடை முன்பு இரத்த வெள்ளத்தில் பிணமானார். அவரை சுட்ட மர்ம மனிதர்கள் தப்பி ஓடிவிட்டனர். அவர்கள் யார் என்று தெரியவில்லை. இதைத் தொடர்ந்து அசாமில் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது. சிராங் மாவட்டத்தில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். (அ-2)



இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள வங்கதேசத்தின் முன்னாள் ஜனாதிபதி, இர்ஷாத் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை தலைநகர் புதுடில்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# நிலக்கரி சுரங்க ஊழலுக்காக மன்மோகன் பதவி விலக வேண்டும்

(சென்னை)

நிலக்கரி சுரங்க ஊழலுக்கு தார்மீக பொறுப்பு ஏற்று பிரதமர் மன்மோகன்சிங் ராஜினாமா செய்ய வேண்டும் என்று பாரதீய ஜனதா வற்புறுத்தி உள்ளது.

நிலக்கரி சுரங்கங்களை தனியாருக்கு குத்தகைக்கு விட்டதில் அரசாங்கத்துக்கு ஒரு இலட்சத்து 86 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டதாக மத்திய தணிக்கை துறையின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நிலக்கரி சுரங்கங்களை தனியாருக்கு குத்தகைக்கு ஒதுக்கிய காலகட்டத்தில் நிலக்கரி இலாகாவை பிரதமர் மன்மோகன்சிங் கவனித்து வந்தார். இந்த அறிக்கை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இதேபோல் மின்திட்ட ஒப்பந்தம் டில்லி விமான நிலைய திட்ட ஒப்பந்தங்களில் முறைகேடு நடந்ததாகவும் பாராளு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தணிக்கை துறை அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் நிருபர்களுக்கு வழங்கிய பேட்டியில் கூறியதாவது,

மே மாதம் 11 ஆம் திகதி அரசிடம் வழங்கப்பட்ட இந்த அறிக்கை கடந்த கூட்டத்தொடரிலேயே பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் தாமதமாக தாக்கல் செய்து இருக்கிறார்கள். இந்த நிலக்கரி சுரங்க ஊழல் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் மற்றொரு பெரிய ஊழல் ஆகும்.

கடந்த 8 ஆண்டுகளில் 5 ஆண்டுகள் பிரதமர் மன்மோகன்சிங் தான் நிலக்கரி இலாகாவை கவனித்து வந்துள்ளார். அந்த கால கட்டத்தில்தான் நிலக்கரி சுரங்க ஊழல் நடந்து இருப்பதால் அதற்கு பிரதமர் மன் மோகன்சிங் நேரடி பொறுப்பாகிறார். எனவே அவர் பதவி விலக வேண்டும் என அவர் கூறினார்.

மேல்சபை எதிர்க்கட்சி தலைவர் அருண் ஜெட்லி கூறுகையில்,

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் பிரதமர் மன்மோகன் சிங் அரசியல் ரீதியாகத்தான் பொறுப்பாளி ஆகிறார். ஆனால் நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு ஊழலில் அவர் நேரடியாக பொறுப்பு ஏற்க வேண்டிய நிலையில் இருக்கிறார். ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் பிற மந்திரிகள் மீது குற்றம் சாட்டியது போல் இதில் அவர் தப்பிக்க முடியாது.

நிலக்கரி சுரங்கங்களை ஏலத்தின் மூலம் ஒதுக்கீடு செய்வது என்று 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிவுசெய்யப்பட்டது. ஆனால் மத்திய அரசு அதன்படி நடந்து கொள்ளாமல் கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் 142 சுரங்கங்களை ஏல முறையிலான போட்டியில்லாமல் ஒதுக்கி இருக்கின்றது.

இதில் நடந்த முறைகேட்டில் அரசியல் ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் நேரடியாகவும் பிரதமர் மன்மோகன்சிங் பொறுப்பாளி ஆகிறார்.

எனவே அவர் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும் என அவர் கூறினார். (அ-2)

# ஆவணி மாத இராசி பலன்

## 17.08.2012 - 16.09.2012



## சிம்மம்

**மகம், பூரம், உத்திரம்
1 ஆம் பாதம்**

## பொன்னான நேரம் ஆரம்பமாகிறது பொருளாதாரத்தில் உயர்நிலை அடைவீர்கள்

**சாதகம் தரும் சனிப்பெயர்ச்சி!**

**நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்துமுடிக்க வேண்டும் என்று சொல்லும் சிம்ம இராசி நேயர்களே!**

உங்கள் வெற்றிக்குப் பின்னணியாக இருப்பது விடாமுயற்சிதான். பின்விளைவைப் பற்றி சிந்திக்காமல் பேசி விடுவீர்கள். பிறகு ஏன் இப்படி பேசினோம் என்று வருத்தப்படுவீர்கள். புதுமைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள் பழமையையும் போற்ற வேண்டும் என்று சொல்வீர்கள். மற்றவர்கள் சவால்விட்ட காரியங்களை மறுநிமிடமே செய்து காட்டுவதில் வல்லவர்களாக விளங்குபவர்கள் நீங்கள். உற்றார், உறவினர்களைக் காட்டிலும் நண்பர்களே உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்.

உங்களுக்கு இந்த ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இராசிநாதன் சூரியன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். குருவின் பாத்தாமிடத்து சஞ்சாரமும், சனியின் வக்ர நிவர்த்தி இயக்கமும் மாதத்தின் மையப் பகுதியில் இருந்தே மாற்றங்களைக் கொடுக்கும். தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும். தித்திக்கும் விதத்தில் வாழ்க்கை அமைய தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

செவ்வாய் ஆதிக்கம் சிறப்பாக இருப்பதால், விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். வீடுகட்டும்யோகம் முதல் நாடு மாற்றச் சிந்தனை வரை நடைபெறவில்லையே என்ற கவலை அகலும் விதத்தில் கிரகங்களில் சஞ்சார நிலை அமைந்திருக்கிறது.

சனி வக்ர இயக்கத்தில் பின்நோக்கிச் சென்ற நிலை மாறி செம்ரம்பர் 12 ஆம் திகதி துலாம் இராசியில் உச்சம் பெறப்போகிறார் ஏழரைச்சனி வந்து விலகி, மீண்டும் வந்து இப்பொழுது விலகுகிறது. எனவே, இனிமேல் தான். உங்கள் வாழ்க்கையில் இலட்சியங்கள் நிறைவேறுவதற்கான அறிகுறிகள் தோன்றும் இக்காலத்தில் சனீஸ்வரனுக்குரிய வழிபாட்டு ஸ்தலங்களுக்கு சென்று வருவதோடு, யோக பலம்பெற்ற நாளில் சர்ப்ப சாந்தியும் செய்வது நல்லது.

**பொன்னான புதனின் பெயர்ச்சி**

ஆகஸ்ட் 24 ஆம் திகதி சிம்ம இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். தனலாபாதிபதி புதன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கும் இந்த நேரம் ஒரு பொன்னான நேரமாகும். பொருளாதார முன்னேற்றத்தின் முதல்படியைத் தொடும் வாய்ப்பு உருவாகும்.

கூட்டாளிகள் கூடுதல் இலாபத்தைக் கொண்டு வந்து சேர்ப்பர். வீட்டில் இருப்பவர்களாக இருந்தாலும்கூட ஏதேனும் ஒருவழியில் வருமானம் வந்து சேரும். தோட்டப் பயிர் மூலமும் வருமானம் வரலாம். சொல்லும் சொற்களால் ஒருசிலருக்கு ஆதாயம் கிடைத்து அதன் மூலம் ஒரு தொகையை உங்களுக்கு கொண்டு வந்து தரலாம். மீண்டும் புதன் செம்ரம்பர் 10 ஆம் திகதி தன ஸ்தானத்தில் உச்சம் பெறப்போகிறார். எனவே, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். சுபச் செய்திகளும் வந்து சேரும்.

**சுக்ர பெயர்ச்சி காலம்!**

ஆகஸ்ட் 31 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்ரன் பெயர்ச்சியாகிச் செல்கிறார். 3, 10 க்கு அதிபதி 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது இடமாற்றம், ஊர்மாற்றம் ஒரு சிலருக்கு வந்து சேரும். இருக்கும் தொழிலை விரிவுபடுத்த நினைப்பீர்கள். மதிக்கும் படியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும், மக்கள் சக்தியைப் பெருக்கிக் கொள்ளவும் வாய்ப்புகள் வாயில் தேடிவந்து கொண்டேயிருக்கும்.

**சந்தோஷங்களைக் கொடுக்கும் சனிப் பெயர்ச்சி**

ஏழரைச்சனியின் ஆதிக்கத்தில் இருந்து என்றைக்கோ விலகிய நீங்கள், மீண்டும் சனியின் வக்ர இயக்கத்தால் ஏழரைச் சனியின் ஆதிக்கத்திலேயே இருக்க நேரிட்டது. செப்ரம்பர் 12 ஆம் திகதி உங்களை விட்டு விலகி, உச்சம்பெற்ற சனியாக, துலாம் இராசியில் அடியெடுத்து வைக்கிறார். எனவே, இனி தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை எதிர்பார்த்தபடியே வந்து சேரும். தொழில் வளர்ச்சி மேலோங்கும்.

இம்மாதம் சூரிய வழிபாடும், அனுமன் வழிபாடும் சுகங்களை வழங்கும்.

இம்மாதம் இனிய மாதம்தான். எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். மாதத்தின் முற்பாதியில் பணப்புழக்கம் அதிகரிக்கும். நகை வாங்குவது முதல் நல்ல காரியங்கள் செய்வது வரை ஒவ்வொன்றாக நடைபெறும். குடும்ப ஒற்றுமை பலப்படும். சொத்துப் பிரச்சினைகளும், சொந்தங்களால் வந்த பிரச்சினைகளும் மாறும். குரு வழிபாடும், சனி வழிபாடும் குதூகலத்தை வரவழைத்துக்கொடுக்கும்.

**ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்**



## கன்னி

**உத்தரம் 2, 3, 4, பாதங்கள்
அத்தம், சித்திரை
1, 2 ஆம் பாதங்கள்**

## இனத்தார் போற்றும் விதத்தில் இனிய காரியங்கள் பல செய்வீர்கள்

**எடுத்த முயற்சிகளில் இனிமேல் வெற்றி கிட்டும்!**

**அமைதியாக இருந்து செயற்படுவதன் மூலம் அனைவரது மனதிலும் இடம் பிடிக்கும் கன்னி இராசி நேயர்களே!**

உங்களிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்தால் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தினர்களிடம் அதிக பாசம் காட்டுவதால் எதையும் உங்களால் மறக்க இயலாது. உறவை பகைத்துக் கொள்ளக் கூடாது என்ற எண்ணத்தை அடிமனதில் பதித்து வைத்திருப்பீர்கள்.

உங்களுக்கு இந்த ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து தடைகளையும், தாமதங்களையும் வழங்கிய சனிபகவான், இனி துலாமிற்கு செல்ல இருக்கிறார். ஒரு வழியாக சனி ஆதிக்கம் முடிந்தது என்று பெருமூச்சு விட முடியாது. இன்னும் இரண்டாண்டு காலத்திற்கு ஏழரைச் சனியின் ஆதிக்கம் இருக்கிறது அல்லவா?

இருந்தாலும், பாதச் சனி என்பதால் வேதனைகளை குறைக்கும், விருப்பங்களை நிறைவேற்றும், ஆதரவைக் கூட்டும், அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொடுக்கும், கிரகங்களும் இருக்கின்றன. எனவே, ஏற்ற இறக்கமான வாழ்க்கை இயல்பாகவே அமையும்.

ஒரு நாள் வரவு, மறுநாள் செலவு, மூன்றாம் நாள் வரவு, நான்காம் நாள் செலவு என்று மாறி மாறி வந்து வாழ்க்கை சக்கரம் ஓடிக்கொண்டே இருக்கும். நல்லது மட்டுமே நடக்க வேண்டும் என்று சொன்னால் நம்பிக்கை வைக்க வேண்டியது இறைவனிடம் மட்டும்தான்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

புதன் உங்கள் இராசிக்கு அதிபதியாவார். அவர் ஆகஸ்ட் 24 ஆம் திகதி விரய ஸ்தானத்திலும், செப்ரம்பர் 10 ஆம் திகதி ஜென்ம ராசியிலும் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, பொருளாதாரநிலை உயரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து, சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன்நின்று நடத்துவீர்கள்.

**சுகம் தரும் சுக்ர பெயர்ச்சி**

சுக்கிரன் ஆகஸ்ட் 31 ஆம் திகதி கடக இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 2, 9 க்கு அதிபதியான சுக்ரன் பதினொன்றாம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். இனத்தார் போற்றும் விதத்தில் இனிய காரியங்கள் பலவும் செய்வீர்கள். பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள் இல்லத்தில் நடைபெறலாம்.

**சனிப்பெயர்ச்சி பலன்கள்!**

ஜென்மச்சனியின் ஆதிக்கத்தில் இருந்த உங்கள் இராசி செப்ரம்பர் 12 ஆம் திகதி முதல் அதிலிருந்து விடுபடுகிறது. இனிகுடும்பச் சனி தொடங்கப் போகிறது. நீண்ட நாள் நடைபெறாத சுபகாரியங்கள் இப்பொழுது நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். சகோதரர்களை அனுசரித்துச் செல்வதே உத்தமம். இரத்த அழுத்தம், உடல்சோர்வு, கிறுகிறுப்பு போன்றவை அடிக்கடி தோன்றி மறையும்.

இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடு உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். அதோடு அஷ்டமத்தில் கேது இருப்பதால் சர்ப்ப சாந்தி செய்து கொள்வதன் மூலம் சந்தோஷத்தை வரவழைத்துக் கொள்ளலாம்.

இம்மாதம் ஜென்மச் சனி ஆதிக்கம் நிறைவு பெறுவதால், சில நல்ல மாற்றங்களை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள். நிம்மதி கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும். பொறுமையை கடைப்பிடிப்பது நல்லது. வாழ்க்கைத் துணையுடன் அனுசரித்துச் சென்றால் அமைதி கூடும். பிள்ளைகளால் ஏற்படக்கூடிய விரயம் தவிர்க்கமுடியாததாக அமையும். செவ்வாய் விரதமும், அம்பிகை வழிபாடும் நல்வாழ்வை அமைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

# இன, மத, குல பேதமின்றி அனைத்து மக்களும் சந்தோசமாக வாழ வேண்டும்!

## வவுனியாவில் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

**இன, மத, குல பேதமின்றி ஒரே அரசாங்கம் என்ற ரீதியில் வடக்கின் வசந்தம் செயற்றிட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல சகலரும் பூரண ஆதரவு வழங்க வேண்டும். அபிவிருத்தியின் மூலம் சகல மக்களும் சந்தோசமாக வாழவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம் என ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கான மாவட்ட விசேட அபிவிருத்திக்கூட்டம் நேற்று முன்தினம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

வவுனியா,மன்னார் மாவட்டப் பிரதேசங்களில் தமிழ், முஸ்லிம், சிங்களம் என மூவின மக்களும் ஒன்றாக இணைந்து வாழ்கின்றனர். சகல மக்களுக்கும் ஒரே விதமான வசதிகள் அரசாங்கத்தால் சமமாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதில் எத்தகைய வேறுபாட்டுக்கும் இடமில்லை.

வடக்கில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி அரசாங்க அதிகாரிகளுடன் கலந்துரையாடவே நான் இங்கு விஜயம் செய்துள்ளேன்.

இக் கூட்டத்தின் மூலம் அவை சம்பந்தமாக நாம் காத்திரமாகக் கலந்துரையாட முடியும். இதற்கு சகலரதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

இப்பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்கள் மகிழ்ச்சியாக வாழ வழிவகை செய்வதே வடக்கின் வசந்தம் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நோக்கம். இனவாதம், குல பேதம் ஒருபோதும் வேண்டாம். நாம் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை ஒன்றிணைந்து பாதுகாப்போம். இதில் அரச ஊழியர்களுக்கு முக்கிய பங்கு உண்டு.

மக்கள் சேவை மகேசன் சேவை என்பதை உணர்ந்து நீங்கள் அர்ப்பணிப்புள்ள மக்கள் சேவையை வழங்க முன்வர வேண்டும். அரச ஊழியர்களுக்கு நான் இதனை எப்போதும் கூறி வந்துள்ளேன். மக்களுக்கு நீங்கள் செய்யும் சேவையைக் கடவுளுக்கே செய்வதாக நினைத்து பணிபுரிய வேண்டுமென நாட்டின் சகல அரச அதிகாரிகளையும் கேட்டுக் கொள்கிறேன்

அமைச்சர்கள் றிசாத் பதியுதீன், டக்ளஸ் தேவானந்தா, பசில் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்த்தன, ராஜித சேனாரட்ன, குணரத்ன வீரக்கோன், எஸ்.எம்.சந்திரசேன உட்பட அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (அ-2)

## பண்டிகைக்காக மின்வெட்டில்லை

(கொழும்பு)

முஸ்லிம்களின் ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக் கிழமை மின்சாரத்தைத் துண்டிக்காதிருப்பதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.

முஸ்லிம் மக்களிடமிருந்து விடுக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை ஆராய்ந்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மின்சார சபையின் உப தலைவர் அனுர விஜேபால குறிப்பிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் இன்றைய தினம் ரம்ழான் நோன்புப் பெருநாள் கடமைகளை தடையின்றி முன்னெடுப்பதற்காக முஸ்லிம் மக்களுக்கு வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கேப்பாப்புலவில் மீள்குடியமர்த்துங்கள்; அமைச்சரிடம் மகஜர் கையளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கேப்பாப்புலவு மக்கள் தம்மை மீள்குடியேற்றுமாறு கூறி கடந்த 16 ஆம் திகதி முல்லைத்தீவிற்கு விஜயம் செய்த மீள்குடியேற்ற அமைச்சரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

மேற்குறித்த கிராமத்தில் தம்மை மீள் குடியேற்றுமாறு 349 குடும்பங்கள் இம் மகஜரை கையளித்துள்ளன.

அதைப்பெற்றுக் கொண்ட அமைச்சர் இதற்குரிய தீர்வைப் பெற்றுதருவதாக உறுதியளித்தார்.

அத்துடன் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை மடுமாதா தேவாலயத்திலும் கடந்த 15 ஆம் திகதி வற்றாப்பளையிலும் தமது வேண்டுதலை முன் வைத்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இக்குடும்பங்களை முல்லைத்தீவிலுள்ள மூன்று இடங்களில் மீள்குடியமர்த்த தீர்மானிக்கப்பட்டபோதும் அவ்விடங்களில் குடியமர்வதற்கான வசதிகள் இல்லை என்பதை சுட்டிக்காட்டி அக்குடும்பங்கள் மறுத்து விட்டன.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக மேற்குறித்த கிராமம் உள்ளதென்றும் கண்ணிவெடி அகற்றப்பட்ட போதும் தம்மை மீள் குடியேற்றவில்லை என்றும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

எனவே, மீள்குடியேற்ற அமைச்சர் நடவடிக்கை எடுத்து தம்மை சொந்த இடத்தில் மீள்குடியேற்றுமாறு கண்ணீர் மல்க கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (அ-3-267)

## இராஜதந்திரிகளின் கைகளில் ஆணைக்குழுவின் அறிக்கை

### ஆவன செய்யப்படும் என்கிறார் மத்திய வங்கியின் ஆளுநர்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் தமிழ் மற்றும் சிங்களமொழி பெயர்ப்பு பிரதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கி இந்தமொழி பெயர்ப்புப் பணிகளை மேற்கொண்டிருந்தது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோருக்கு இந்த மொழிபெயர்ப்புகளின் முதல் பிரதிகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரல் இந்த பிரதிகளை வழங்கியுள்ளார். இந்த அறிக்கையின் பிரதிகளை உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களும் இராஜதந்திரிகளும் பெற்றுக்கொள்ள ஆவன செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில நாட்களில் இந்தப் பிரதிகளை மக்கள் பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## இந்திய மீனவர் மீதான தாக்குதல் தொடர்பில் விளக்கமளியுங்கள்

### சென்னை உச்ச நீதிமன்றம் உத்தரவு

இந்திய மீனவர்களுக்கு பாதுகாப்பு குறித்த வழக்கு தொடர்பாக சென்னை உச்ச நீதிமன்றம் மதுரை கிளையில் மத்திய அரசு கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் தமிழக அரசின் தலைமை சட்டத்தரணிகள் உள்ளிட்டோர் வாதிட்டுள்ளனர்.

இந்திய மீனவர்களுக்கு முப்படை பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று சட்டத்தரணிகள் ஸ்டாலின் உச்ச நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இவ்வழக்கு நீதிபதிகள் ஜனார்த்தன ராஜா மற்றும் விஜயராகவன் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

இவ்வழக்கு தொடர்பாக மத்திய அரசு கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ரவி வாதிட்டதாவது, இந்திய மீனவர்கள் (குறிப்பாக தமிழக மீனவர்கள்) இந்திய எல்லையை தாண்டி இலங்கை எல்லைக்கு சென்று மீன் பிடிக்கும் போதுதான் தாக்கப்படுவதாகவும் இந்திய எல்லையில் தாக்கப்படுவதில்லை என்று கூறினார்.

மாநில அரசு சார்பில் வாதிட்ட தமிழக அரசின் தலைமை சட்டத்தரணி நவநீதகிருஷ்ணன் இந்திய எல்லையில்தான் மீனவர்கள் தாக்கப்படுவதாகவும் இலங்கை எல்லையில் தாக்குதல் நடைபெற்றால் தாங்கள் ஏன் அதுபற்றி பேசுவதாக அவர் கூறினார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், மீனவர்கள் மீதான தாக்குதல் மற்றும் வழக்குப் பதிவு குறித்து விளக்கம் அளிக்கும் படி உத்தரவிட்டு வழக்கு விசாரணையை செப்டெம்பர் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். இது குறித்து தமிழக அரசு சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. (அ-2)

## கொரியமொழி பரீட்சைக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

(கொழும்பு)

கொரிய மொழிப் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் நாளை 20 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ளதாக வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இவ் அனுமதிப்பத்திரங்களை பரீட்சார்த்திகள் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரிய மொழிப் பரீட்சைகளுக்காக கொழும்பில் 6 பரீட்சை மத்திய நிலையங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இம்மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 24 மத்திய நிலையங்களில் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன. (அ-2)




# இலங்கை வரலாறு

14

# இலங்கையின் புகழ் பூத்த மன்னன் தேவநம்பியதீசன்



இது தேவநம்பியதீசன் சிலை என சொல்லப்படுகிறது

"நான் புத்தனின் அடிமை. சாக்கியமுனியின் போதனைகளை உபாசிப்பவன். புத்தரிடத்திலும் அவர் தர்மத்திலும் நான் சரணடைந்துள்ளேன். மனிதருட் சிறந்தவனே, உன் மனதையும் நம்பிக்கையுடன் மாற்றி, மும்மணிகளிடம் (புத்தம், தர்மம், சங்கம்) நீயும் சரணடைவாயாக. நீயும் அவன் அருளாசிக்குட்படுவாயாக" என்ற செய்தியையும் தூதுவர்கள் மூலம் அனுப்பி வைத்தான் அசோகன். அவர்கள் ஜம்புக் கோளத் துறையிலிறங்கி, அனுராத புரம் வந்து மன்னனிடம் அப்பரிசில் பொருட்களை அளித்தனர். தீசன் அசோகன் அனுப்பிய மகுடாபிஷேகப் பொருட்களைப் பயன்படுத்தி மீண்டும் ஒரு முறை தேவநம்பிய தீசன் என்ற நாமத்தோடு (கடவுளுக்குப் பிரியமான தீசன்) முடிபுனைந்து கொண்டான் என மஹாவம்சம் கூறும். இம்மன்னது ஆட்சிக்காலத்திலிருந்தே இலங்கை வரலாறு ஓரளவு சீராகின்றது என்பர். ஜாதக்கதைகள், மரப்புக்கதைகள், மகாபாரதக்கதைகள் என்பனவற்றோடு கூறப்பட்டு வந்த மஹாவம்ச வரலாறு தேவநம்பிய தீசனின் பின்னர் நம்பகத் தன்மையுடையதாக மாறுகின்றது.


### தேவநம்பிய தீசனுக்கு முந்தைய சமயநிலை

தேவநம்பிய தீசனுக்கு முந்தைய இலங்கையின் மதவழிபாடு தெளிவானது. நாகர்களில் பெரும்பாலோர் இந்துக்களாக (இலிங்கவழிபாடும் நாகவழிபாடும்) விளங்கியுள்ளனர். ஒரு சிறு சாரார் பௌத்த மதத்தைத் தழுவியிருந்தனர். அதே போல ஏற்கனவே இலங்கைக்கு வந்திருந்த தேவர்கள் (ஆரியர்கள்) பௌத்த மதத்தைக் கைக் கொண்டிருந்தனர். புத்தரின் இலங்கை விஜயங்களால் ஏற்பட்ட மதமாற்றம் இவை என்பதை மறந்துவிடக் கூடாது. இயக்க மக்கள் வைசாச வணக்கத்துடன் (ஆவி) இயற்கை வணக்கம் உடையவர்களாகவும் விளங்கியுள்ளனர். சமணத்துறவிகள் (நிகண்டர்கள்), ஆஜிவர்கள் (ஒரு மதம்), என்போரும் இருந்துள்ளனர். காலவேலன், சித்திராஜா, சேதிய, வைஸ்சாவனா, வைத்தியநாதன் போன்ற இயக்கத் தேவர்களும், தலவிருட்சத்தேவர்களும், வழிபடப்பட்டுள்ளனர். தேவநம்பிய தீசன் காலப் பௌத்தமத வருகைக்குப் பின்னரும் இந்த வழிபாட்டு முறைகள் அழிந்து போகவில்லை. அவை தனித்துவமாக வளர்ச்சி பெற்றதுடன், பௌத்த வழிபாட்டுடனும் ஊடுருவிச் சென்றன.

### 3.4 பௌத்த சமயத்தின் வருகை

பௌத்த மதத்தினை உலகெங்கும் பரப்பும் எண்ணங்கொண்ட அசோகன், தனது மகன் மகிந்ததேரரையும், தனது பேரன் சுமணசாமனேரர் மற்றும் இத்திய, உத்திய, சம்பல, பத்தசால ஆகிய நான்கு தேரர்களையும், பண்டுகன் என்ற ஒரு உபவாசியையும்,

தேவநம்பியதீசன் அமைத்த தூபராம சமாதி




அடக்கிய ஒரு தூதுக்குழுவை இலங்கைக்கு அனுப்பி வைத்தான். கி.மு. 247 இல் மகிந்ததேரரும் அவரது தூதுக்குழுவினரும் இலங்கைக்கு வந்து மிஹிந்தலை (மிசாகபர்வதம்) மலையை வந்தடைந்தனர்.

பொசன் பௌர்ணமி தினத்தில் மிசாகபர்வதம் எனும் மிஹிந்தலைக்கு மகிந்ததேரர் வந்தார். அவருடன் சுமண, இத்திய, உத்திய, சம்பல பத்தசால, பண்டுகன் ஆகிய சீடர்களும் இருந்தனர். அந்த நாள் புத்தர் மறைந்து 237 ஆண்டுகளின் பின் வந்த பொசன் போயா தினமாகும். அவ்வேளை வேட்டை ஆடுவதற்காக தேவநம்பியதீசன் தன் பரிவாரங்களுடன் மிஹிந்தலைக் காட்டுப் பகுதிக்கு வந்திருந்தான். மான் ஒன்றினைத் துரத்திச் சென்றபோது அந்த மான் மிஹிந்தலைப் பக்கம் அவனை இழுத்துச் சென்றது. இவ்விடம் வந்த அரசனை "திஸ்ஸ, இங்கே வருக" என மகிந்ததேரர் அழைத்தார். மிஹிந்தலை மலை உச்சியில் நின்றிருந்த மகிந்ததேரரை மன்னன் கண்டான். அம்பு வில்லை ஒரு புறத்தில் போட்டுவிட்டு மகிந்த தேரர் அருகில் சென்று வணங்கினான். "நாங்கள் தர்மராஜாவின் தூதுவர்கள் உன்மீதுள்ள கருணையால் ஜம்புத்தீவிலிருந்து இங்கு வந்துள்ளோம்" என்றார். அவருடைய தர்ம போதனைகளை ஏற்று அவனும் பரிவாரங்களும் பௌத்தமதத்தைத் தழுவிக் கொண்டனர். இலங்கையின் முதலாவது பௌத்த மன்னன் தேவநம்பியதீசனாவான். மகிந்ததேரரையும் குழுவினரையும் அனுராதபுரத்திற்கு அழைத்து வந்தான். மகாமேக வனம் என்ற தோட்டத்தை அவர்களுக்கு அர்ப்பணித்து அங்கு அவர்களைத் தங்கவைத்தான். இங்கு இலங்கையின் பௌத்த மையமாக மகாவிகாரை ஆரம்பிக்கப்பட்டது. அங்கிருந்து மகிந்ததேரரும் ஏனையோரும் பௌத்த மதத்தினை போதனை செய்து மக்களைப் பௌத்தராக்கினர். அரசனின் மருமகனான அரிட்டன் (அரிட்டகுமரன்) பிக்குவாக அபிஷேகம் செய்யப்பட்டான். அவனுடன் வேறு சிலரும் பிக்குகளாக மாறினர்.

இந்தியாவிலிருந்து எடுத்து வரப்பட்ட புத்தரின் விலா எலும்பு வைக்கப்பட்டு அனுராதபுரத்தில் முதன் முதலாக ஒரு தூபி கட்டப்பட்டது. அதுவே தூபராமசமாதி என்ற தாதுகோபமாகும். இத்தூபியைக் கட்டுவதற்கான இடத்தை மகிந்ததேரரே சுட்டிக்காட்டினார். தூபராமசேத்தியம் கட்டப்பட்ட இடத்தில் முன்னர் மகேஜ் என்ற தெய்வத்தின் கோயில் இருந்ததாக அறியப்படுகின்றது. மகேஜ் கோயிலை நீக்கிவிட்டே தூபராமசத்தியம் நிறுவப்பட்டுள்ளது. இந்த மகேஜைச் சிற்றம்பலம் என்பவர் (மகேசன்) சிவன் கோயில் என இனங்காண்பார். மகாமேகவனத்தில் மகிந்தரைச் சந்தித்த தீசனின் சகோதரனின் மனைவி அனுலா என்பவள், தான் பௌத்த மதத்தைத் தழுவித் துறவற வாழ்க்கையை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தாள். அவ்வாறு பல பெண்கள் விரும்பினர். அதனால் மகிந்ததேரர் தன் சகோதரியான சங்கமித்ததேரியை இலங்கைக்கு அழைப்பித்தார். கி.மு. 247 இல் சங்கமித்தை தனது குழுவுடன் ஜம்புக்கோளத்திற்கு வந்து இறங்கினாள். வரும்போது புத்தர் அமர்ந்திருந்து பரிநிர்வாணமடைந்த அரசமரத்தின் கிளை ஒன்றை பதியம் செய்து எடுத்து வந்தாள்.

(தொடரும்)



சங்கமித்தை அரசமரக்கிளை நாட்டிய பகுதி-மகா மேகவனம் அருகில் பாதுகாப்புச்சுவர் காணப்படுகிறது

தேவநம்பியதீசனால் வெளியிடப்பட்ட நாணயம் என்று கூறப்படுகிறது



# இலங்கை ம.உ.நிலைமைகள் தொடர்பில் நவிபிள்ளை குழுவினர் ஆராயப்போவதில்லை



## விசேட பிரதிநிதி மஹிந்த சமரசிங்க நம்பிக்கை

(கொழும்பு)

**இலங்கையின் மனித உரிமை நிலைமை குறித்து மதிப்பீடு செய்ய நவநீதம்பிள்ளையினால் நியமிக்கப்பட்டுள்ள இந்தியா, ஸ்பெயின் மற்றும் பெனின் ஆகிய நாடுகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை பார்வையிடப் போவதில்லை என்று மனித உரிமைகள் விவகாரம் குறித்த ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாறாக ஜெனீவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள யு.பி.ஆர். எனப்படும் உலககால மீளாய்வு கூட்டத் தொடரின் போது இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கே குறிப்பிட்ட மூன்று நாடுகள் நியமிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் மனித உரிமைகளை மதிப்பீடு செய்வதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இந்தியா, ஸ்பெயின் மற்றும் பெனின் ஆகிய நாடுகள் நியமித்தமை தொடர்பில் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளை இவ்வாறு நியமித்தமை குறித்து அரசாங்கம் அதிருப்தி வெளியிட்டதாகவும் தகவல்கள் வெளியாகின.

நியமிக்கப்பட்டுள்ள நாடுகள் தொடர்பில் விமர்சனங்கள் இருந்தாலும் அந்த நாடுகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு மனித உரிமை நிலைமைகள் குறித்து ஆராயவோ மதிப்பீடு செய்யவோ முயற்சிக்கப்போவதில்லை.

மாறாக யு.பி.ஆர். கூட்டத்தொடரில் எம்முடன் இணைந்து மனித உரிமை நிலைமையை ஆராய்ந்து மதிப்பீடு செய்யவே இந்தியா, பெனின் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் நியமிக்கப்பட்டுள்ளன. இதனை நன்றாக புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

யு.பி.ஆர்.எனப்படும் உலககால மீளாய்வுக் கூட்டத் தொடரில் போருக்குப் பின்னர் இலங்கையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து விளக்கமளிப்போம் என்றார்.

இதேவேளை, இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்டிருந்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச இலங்கைக்கு எதிரான அமெரிக்க அனுசரணையுடனான தீர்மானத்துக்கு வாக்களிக்காமல் நடுநிலை வகித்த நாடுகளை நவநீதம்பிள்ளை நியமித்திருந்தால் அது ஓரளவு நியாயமானதென இலங்கை கருதியிருக்கும்.

ஆனால், குறித்த பிரேரணைக்கு ஆதரவு வழங்கிய நாடுகளை நியமித்தமையினால் நவநீதம்பிள்ளை உள்ளிட்ட முழு ஐ.நா. செயற்பாடு மீதான எமது சந்தேகம் வலுவடைகின்றது என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-1)

# பிரிட்டிஷ் எயார் வேஸ் விமான சேவை மீண்டும் ஆரம்பமானது

(கொழும்பு)

யுத்த நிலவரம் காரணமாக சில வருடங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த பிரிட்டிஷ் எயார் வேஸ் விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க அந் நிறுவனம் முடிவு செய்துள்ளதாக சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்தன தெரிவித்தார்.

இதன்படி அடுத்த வருடம் மார்ச் மாதம் முதல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்த விமான சேவை ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் தற்சமயம் அமைதியான சூழ்நிலை நிலவுவதுடன் இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்திருப்பதும் இந்த விமான சேவை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முக்கிய காரணமாகும்.

அவ்வாறே இலங்கைக்கும் பிரித்தானியாவுக்குமிடையிலான நட்புறவு மேலும் வலுவடைகிறது. எமது நாட்டைப்பற்றி ஒருசில தீய சக்திகள் மேற்கொண்ட பொய் பிரசாரத்துக்கு பதிலடியாகவும் இது அமைவதுடன் இலங்கையரான எமக்கு பெருமைப்பட வேண்டிய விடயமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# சன்னார் கிராம மக்களது தொடர் போராட்டம் வெற்றி பெற்றது

(மன்னார்)

மன்னார் மாவட்டம் சன்னார் கிராம மக்களது தொடர் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் மாந்தை மேற்கு பிரதேச செயலர் ஒவ்வொரு குடும்பத்திற்குமான அரை ஏக்கர் காணியினை தமிழ் குடும்பங்களுக்கு பகிர்ந்தளித்ததுடன் அதற்கான பெமிட் துண்டுகளையும் வழங்கியிருந்தார்.

சுமார் 142 குடும்பங்களுக்கான பெமிட் அனுமதி பத்திரமே நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது. மிகவும் வறிய பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வரும் இம் மக்களுக்கு மாற்றிடத்தில் வீடு, மலசலகூடமென பல ஆசை வார்த்தைகள் அரசால் கூறப்பட்ட போதும் அவற்றை பொருட்படுத்தாமல் தமது நிலம் தமக்கு வேண்டுமென இப்பகுதி மக்கள் கடைசி வரை போராடியே வந்திருந்தனர். அத்தகைய சூழலில் அவர்களது போராட்டத்திற்கு அரசு இறங்கி வந்து அவர்களது காணியை அவர்களிடமே மீளக் கையளித்துள்ளது.

குறித்த காணி விவகாரமே மன்னார் ஆயருக்கும் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கும் இடையேயான முறுகல் நிலைக்கும் வித்திட்டிருந்தது. பரஸ்பரம் இரு தரப்புகளும் முட்டி மோதும் நிலையை அடைந்திருந்ததும் அனைவரும் அறிந்ததே.

எனினும் மன்னார் நீதிபதிக்கு கொலை மிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பாக றிசாத் மீதான நெருக்குவாரங்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்த விவகாரம் முடிவுக்கு வந்துள்ளது. (அ-2)



கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலய ஆரம்பப்பிரிவு மாணவர்களின் மாதிரிச் சந்தை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வினை வட்டக்கச்சி சிவிக்சென்ரர் கிராம அலுவலர் ஜோன் ஜெகநாதன், பாடசாலை அதிபர் உள்ளிட்டோர் பார்வையிடுவதையும் படத்தில் காணலாம். (படம்:- வட்டக்கச்சி செய்தியாளர்)

# ஆஸி.செல்ல முற்பட்ட படகு நடுக்கடலில் தத்தளிப்பு

## 38 பேரை கடற்படையினர் மீட்டனர்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் நோக்கில் பயணித்த அகதிப்படகு ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் அப்படகிலிருந்த பாதிக்கப்பட்ட அகதிகளை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இது குறித்து தெரிய வருவதாவது,

நீர்கொழும்பிலிருந்து இந்தப் படகு அவுஸ்திரேலியா நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளது. சர்வதேச கடற்பரப்பில் வைத்து குறித்த படகின் இயந்திரம் தொழில்நுட்ப கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் சுமார் 38 பேர் பயணித்துள்ளதாகவும் சுமார் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் இந்தப் பயணம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் இதனால் உணவு குடிநீர் வசதியின்றி படகுப் பயணிகள் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

படகில் தத்தளித்துக் கொண்டிருந்த எட்டு பேர் வேறு படகு ஒன்றில் ஏறிச் சென்றுள்ளனர்.

படகு விபத்துக்குள்ளானமை தொடர்பில் பயணத்தை ஒழுங்கு செய்த நீர்கொழும்பு வர்த்தகர் ஒருவருக்கு தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி படகில் பயணித்தவர்களை மீட்பதற்காக மேலுமொரு படகு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. காப்பாற்றப்பட்ட படகில் 19 தமிழர்களும் 11 சிங்களவர்களும் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தகரின் படகு சென்றடைவதற்கு முன்னதாக கடற்படையினர் குறித்த படகில் தத்தளித்துக் கொண்டிருந்த அகதிகளை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# நான்கு மாதங்களில் 10 ஆயிரம் ஏக்கர் காடுகள் தீக்கிரையாகின

(கொழும்பு)

வேட்டைக்காகவும் சட்டவிரோத சேனைப் பயிர்ச்செய்கைகளுக்காகவும் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து பத்தாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காடுகள் தீ மூட்டப்பட்டு எரிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

காடுகளுக்கு தீ மூட்டுவோரை கைது செய்ய முடியாத காரியமாக உள்ளது என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடக பணிப்பாளர் சரத் லால் குமார கூறியுள்ளார்.

இதுவரையில் பதுளையில் இருவரும் மொனராகலையில் ஒருவரும் மட்டும்தான் கைதாகி உள்ளனர் என அவர் கூறினார்.

எமது காடுகளை மாத்திரமன்றி அங்கு காணப்படும் நீரூற்றுக்கள், அருவிகளையும் இதனால் இழக்க வேண்டியுள்ளது. தீயை அணைக்க பயன்படுத்தப்படும் வளங்களும் பெரும் விரயமாகும் என அவர் கூறியுள்ளார். (அ-2)

# 167 தடவைகள் தமிழக மீனவர் மீது இலங்கை கடற்படை தாக்கியுள்ளது

## தமிழக சட்டமா அதிபர் தகவல்

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட 167 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தமிழக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

1991 ஆம் ஆண்டுக்கும் 2011 ஆம் ஆண்டுக்கும் இடையில் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக நேற்று முன்தினம் சென்னை மேல் நீதிமன்றத்தில் தமிழகத்தின் சட்டமா அதிபர் நவநீதக்கிருஸ்ணன் இந்தத் தகவல்களை வெளியிட்டார். இதே வேளை, இந்த சம்பவங்களின் போது தமிழக மீனவர்கள் இந்திய கடற்பரப்பில் வைத்தும் தாக்கப்பட்ட சம்பவங்கள் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தக் காலப்பகுதியில் 746 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

தமிழக மீனவர்களுக்கு இந்திய கடற்படையினர் உரிய பாதுகாப்பை வழங்குவதில்லை என்று குற்றம் சுமத்தி தொடரப்பட்ட வழக்கு விசாரணையின் போது இந்த தகவல்கள் வெளியிடப்பட்டன.

இந்த நிலையில் இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய தொழில் உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்று தமிழக அரசாங்கம் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தது. (அ-2)

# கேரளா ஊடாக ஆஸிக்கு பயணிக்க முயன்ற இலங்கையர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்

(கொழும்பு)

கேரளாவின் கொல்லம் ஊடாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற 12 இலங்கைத் தமிழர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகளை கேரள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஜூன் 3 ஆம் திகதி 151 பேர் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக செல்ல முற்படுகையில் கேரள பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 19 பெண்களும் 22 சிறுவர்களும் இருந்தனர்.

அதிலும் 12 பேர் இலங்கையில் இருந்து ஜூன் 2 ஆம் திகதி சுற்றுலா விசாவில் கேரளா வந்து இந்த அவுஸ்திரேலியா செல்லும் குழுவுடன் இணைந்துக் கொண்ட வர்களாவர் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

ஏனையோர் தமிழகத்தின் இலங்கை அகதி முகாம்களில் உள்ளவர்களாவர் இந்த நிலையில் தமிழகத்தின் அகதி முகாம்களில் இருந்தவர்கள் மீண்டும் தமிழகத்துக்கு அனுப்பப்பட்டனர்.

இலங்கையில் இருந்து வந்த 12 பேர் மாத்திரம் கேரளாவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் இவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுவார்களானால் நீண்ட நாட்களுக்கு பின்னர் இந்தியாவினால் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படும் தமிழர்களாக இவர்கள் இருப்பார்கள் என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-2)

# ஆஸி.அழைத்துச் செல்லமுயன்ற முகவர்கள் ஐந்து பேர் கைது

(கொழும்பு)

இலங்கை அகதிகளை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல முயன்ற ஐவர் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு கியூ பிரிவு பொலிஸாரால் இதனுடன் தொடர்புடைய மேலும் இருவரை கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெறுவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர்கள் தமிழக கடற்பரப்பின் ஊடாக கிறிஸ்மஸ் தீவிற்கு பயணிப்பதற்கு இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்கள் படகொன்றின் மூலம் 23 இலங்கை அகதிகளை சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு அழைத்துச் செல்வதற்கு திட்டமிட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய 50 ஆயிரம் முதல் இரண்டு இலட்சம் வரையான இந்திய ரூபாய் பணம் கைது செய்யப்பட்டவர்களால் அறவிடப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# கருணாரட்ன மீது முட்டைத்தாக்குதல்

(கொழும்பு)

தம்புள்ளையில் இடம்பெற்ற ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட புதிய சமத்துவக்கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன மீது முட்டைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் கலந்து கொண்டிருந்தார்.

சம்பவம் குறித்து விக்ரமபாகு கருணாரட்னவிடம் கேட்டபோது, இந்தத் தாக்குதல் குறித்து தாம் அறிந்திருக்கவில்லை எனவும் தமக்கு எதிராக சிலர் இந்த தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை டெசோ மாநாட்டில் கலந்துகொண்டமை தமது சுய உரிமை எனவும் அதனை பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் இவ்வாறான முறைகேடான விதமாக செயற்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் தமது மனிதாபிமானம் மிக்க தமிழ் மக்களை நெருக்கடியிலிருந்து மீட்கும் எனது அரசியல் பயணம் தொடரும் எனவும் விக்ரமபாகு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *1862-மினசோட்டாவில் லகோட்டா பழங்குடியினர் நியூ ஊல்ம் குடியேற்றத்திட்டத்தைத் தாக்கி பல வெள்ளையர்களைக் கொன்றனர்.*

★ *1895- கொழும்பு தலைமை அஞ்சல் அலுவலகம் திறக்கப்பட்டது.*

★ *1915-முதலாம் உலகப் போர்: ஒட்டோமான் பேரரசுப் படைகளுக்கெதிராக ஆர்மீனியர்கள் தாக்குதலைத் தொடுத்தனர்.*

★ *1919-ஐக்கிய இராச்சியத்தில் இருந்து ஆப்கானிஸ்தான் முழுமையான விடுதலை அடைந்தது.*

★ *1934-ஜேர்மனியில் பியூரர் பதவியை ஏற்படுத்த நாட்டின் 89.9% மக்கள் ஆதரவாக வாக்களித்தனர்.*

★ *1944-இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நட்பு நாடுகளின் உதவியுடன் பாரிஸ் தாக்குதலைத் தொடுத்தது.*

★ *1945-ஹோ ஷி மின் தலைமையில் வியெட் மின் படைகள் வியட்நாமின் ஹனோய் நகரைக் கைப்பற்றினர்.*

★ *1946- கொல்கத்தாவில் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலகத்தில் 3 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.*

★ *1953-பனிப்போர்: அமெரிக்காவின் சிஐஏயின் உதவியுடன் ஈரானின் முகமது மொசாடெக்கின் அரசு கவிழ்க்கப்பட்டு ஷா முகமது ரேசா பாலாவி தலைமையில் அரசு அமைக்கப்பட்டது.*

★ *1960-சோவியத்தின் ஸ்புட்னிக் 5 விண்கலம் பெல்கா ஸ்ட்ரெல்கா என்ற இரு நாய்களையும் 40 சுண்டெலிகளையும் 2 எலிகளையும் பல வகைத் தாவரங்களையும் கொண்டு சென்றது.*

★ *1980- சவுதி அரேபியா பயணிகள் விமானம் ஒன்று தரையிறங்குகையில் தீப்பிடித்ததில் 301 பேர் கொல்லப்பட்டனர்.*

★ *1989- போலந்தின் பிரதமராக சொலிடாறிற்றி தொழிற்சங்கவாதி டாடியூஸ் மசவியேஸ்கி ஜனாதிபதி ஜாருசெல்ஸ்கியினால் தெரிவு செய்யப்பட்டார். 42 ஆண்டுகளின் பின்னர் தெரிவு செய்யப்படும் முதல் கம்யூனிஸ்ட் அல்லாத பிரதமர் இவரே ஆவார்.*

★ *1991- ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி ஒன்றில் சோவியத் ஜனாதிபதி மிகைல் கர்பசோவ் கிறிமியா என்ற சுற்றுலா மையத்தில் ஓய்வெடுக்கும் போது கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.*

★ *2002-ரஷ்யாவின் Mi-26 ரக உலங்கு வானூர்தி செச்சினியத் தீவிரவாதிகளின் ஏவுகணையால் தாக்கப்பட்டதில் 118 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.*

**பிறப்புக்கள்**

★ *1871- ஓர்வில் ரைட், எஞ்சின் உந்தும் ஊர்தியில் பறந்து சாதனை படைத்தவர் (இ.1948)*

★ *1918-சங்கர் தயாள் சர்மா, இந்தியாவின் 9 ஆவது குடியரசுத் தலைவர் (இ.1999)*

★ *1929-ச.அகத்தியலிங்கம், தமிழக மொழியியல் அறிஞர் (இ.2008)*

★ *1931- ஜி.கே.மூப்பனார், தமிழக காங்கிரஸ் தலைவர் (இ.ஒகஸ்ட் 30, 2001)*

★ *1946-பில்கிளின்டன், ஐக்கிய அமெரிக்காவின் 42 ஆவது குடியரசுத் தலைவர்*

**இறப்புக்கள்**

★ *1934-ஃவெடரிக்கோ கார்சியா லோர்க்கா, ஸ்பானிய எழுத்தாளர் (பி.1898)*

★ *1962- இலாய்சி பாஸ்கல், பிரெஞ்சு அறிவியலாளர் (பி.1623)*

**சிறப்பு நாட்கள்**

★ *ஆப்கானிஸ்தான்- விடுதலை தினம் (1919)*

★ *உலகப் புகைப்பட தினம்*

***வில்லியம்-அடோல்ஃப் பூகுவேரோ***



வில்லியம்-அடோல்ஃப் பூகுவேரோ பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஓர் ஓவியர் ஆவார். பூகுவேரோ லா ரோச்சேல் என்னுமிடத்தில் பிறந்தார்.

இவர் பாரிஸ் நகரிலுள்ள இக்கோல் டெஸ் பூயிக்ஸ் ஆர்ட்ஸ் இன் மாணவர். இவரது இயல்பிய ஓவியங்களும் தொன்மங்கள் சார்ந்த ஓவியக் கருக்களும் ஆண்டு தோறும் நடைபெற்ற பாரிஸ் சலோன் கண்காட்சியில் வைக்கப்பட்டன.

இவர் தொழில் புரிந்த காலம் முழுவதும் இவரது ஆக்கங்கள் இக் கண்காட்சியில் இடம்பெற்றன. உணர்வுப் பதிவுவாதிகளுக்கு இவர் காட்டிய தீவிர எதிர்ப்பினாற் போலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவர் புகழ் மங்கியது. எனினும் இவருடைய ஆக்கங்கள் புதிய ஆதரவைப் பெற்றன. இவர் 826 ஓவியங்களை வரைந்துள்ளார்.

# இரு தசாப்தங்களாகியும் தொடர்கிறது வலிகாமம் மக்களின் அவல வாழ்வு


தமிழ்மாறன்



தமிழர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று அரசாங்கம் பிரசாரம் செய்கிறது. தமிழர்கள் 2009 மே மாதத்திற்கு முன்பாகவே பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தவர்கள் என்றும் இப்பொழுது அவர்களுக்கு வசந்தமும் உதயமும் பூத்துவிட்டன என்றும் அது குறிப்பிடுகின்றது. இன்று ஈழத்தமிழ் மக்களின் துயர நிலைதான் இலங்கை அரசின் சாதனை என்பதற்கு சாட்சிகளாக வலிகாமம் மக்களும் உள்ளனர். நிலமிழந்து அகதிகளாக வாழும் மயிலிட்டி, தையிட்டி போன்ற வலிகாமம் வடக்கு கிராமங்களைச் சேர்ந்த மக்களின் அகதி அடையாளப்பறிப்பு முயற்சிகள் உண்மையில் ஈழத்தில் என்ன திரும்பியிக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

ஈழத்து மக்கள், உலகில் மனச்சாட்சியுள்ளவர்களை கண்ணீர்விட வைக்கும் அகதிகளாகிவிட்டார்கள். உலகெங்கும் உலகக் கடல் எங்கும் அலைந்து கொண்டிருக்கும் வாழ்க்கையை சாபமாக அடைந்துள்ளார்கள். நிலம் இழக்கும் மக்களுக்கு இயல்பாகவே அகதி என்கிற அடையாளம் ஏற்படுகிறது. உலகின் எந்தவொரு அகதியும் அகதி என்கின்ற அடையாளத்தை விரும்புவதில்லை. ஏனெனில் நிலமிழந்த, நாடிழந்த, வாழ்விழந்த நிலையை அகதிகளின் வாழ்க்கை ஏற்படுத்துகிறது. ஆனால், ஈழத்து மக்களிடம் இலங்கை அரசு அகதி என்கிற அடையாளத்தையும் பறிக்க நினைக்கிறது. நிலமிழந்த நிலையில் அகதிமுகாம்களையும் பறிக்க நினைக்கிறது.

25 ஆண்டுகள் நிலத்தை இழந்து வாழ்வதென்பது எவ்வளவு கொடுமையானது? ஒரு நாள் வீடு திரும்ப முடியாமல் இருப்பதே பெரும் கொடுமையாக உணரப்படும் நிலையில், 25 ஆண்டுகள் நிலத்தையே காணாத, நிலத்திற்குத் திரும்பாத வாழ்க்கையை எங்கள் மக்கள் அனுபவிக்கிறார்கள். நாட்டை ஆள்பவர்களும் நிலத்தை அபகரிப்பவர்களும் இதைக்குறித்து இரங்குவதில்லை. இன்று நிலம் பறிக்கப்படும் பொழுது சொல்லப்படும் காரணங்கள் மிகவும் சாதாரணமாக இருக்கின்றன. மிகவும் சுலபமாக சொல்லப்படுகின்றன. மக்களுக்கும் அவர்களின் மண்ணுக்கும் இடையிலான வாழ்க்கை குறித்து சிந்திக்க மறுப்பதுபோல காட்டும் இத்தகைய நடவடிக்கையை நில அபகரிப்புத் திட்டம் என்றே நாம் தெளிவாக அடையாளப்படுத்தி அதற்கெதிராக கடுமையாகப் போராட வேண்டியிருக்கிறது.



வலிகாமம் வடக்கு மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகி 25 ஆண்டுகளாகின்றன. இந்த மக்கள் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பாத நிலையில் போருக்குப் பிந்திய நடவடிக்கையில் இந்த மக்களின் பிரச்சினையை மிகவும் சாதாரணமாக தட்டிக் கழித்துச் செல்கிறது இலங்கை அரசு. “அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனுடன் மயிலிட்டி, தையிட்டி முதலான கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தஞ்சம் அடைந்திருந்த சில அகதிமுகாம்களுக்குச் சென்றிருந்தேன். நிலம் இழந்ததனால் ஏற்பட்ட அகதி அடையாளமும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட அகதிமுகாம்களும் பறிக்கப்படும் அவல நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்தமக்கள், தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக கொதிப்போடு பேசுகிறார்கள்.

சுன்னாகத்தில் உள்ள சபாபதிப் பிள்ளை முகாமில் சில நலிந்த தாய்மார்கள் குழாய்க் கிணறுகளில் தண்ணீர் எடுத்துக்கொண்டிருந்தார்கள். நிலமிழந்த தாய்மார்களின் முகங்களில் துயரக் கோடுகள் நிரந்தரமாகப் பதிந்து விட்டன. ஊரிழந்துபோனதால் எங்கள் தாய்மார்கள் மனநோயாளிகளாகிவிட்டார் என்று கிராமத்தை விட்டு வரும்பொழுது சிறுமியாக இருந்த, இப்போது தாயாக இருக்கும் பெண் ஒருவர் தெரிவித்திருந்தார். வெறுமைகள் நிரம்பிய தாய்மார்களை மிகவும் சின்னதான அந்த வீடுகளின் முன்பக்க தாழ்வாரங்களில் காண முடிந்தது. சபாபதிப்பிள்ளை முகாமில் மாத்திரம் 395 குடும்பங்களைச் சேர்ந்த 600 பேர் தங்கியுள்ளனர். இந்த முகாம்தான் இன்று பெரும் அவலத்திற்கு முகம் கொடுத்து வருகின்றது.

“இப்ப திரும்பி வந்திடுவம் என்று நினைத்தோம். எதிர்பாராமல், எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிய அந்த நாள் 1990 ஆனி மாதம் 15 ஆம்திகதி” என்று நினைவு கூர்ந்தார் குணபாலசிங்கம் ரஜனி. இடம்பெயரும் பொழுது தனக்கு 16 வயது என்றும் மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தில் கல்விகற்றதாகவும் ரஜனி குறிப்பிட்டார். இப்போது ரஜனியின் பிள்ளைகள் தங்கள் பூர்வீக நிலம்பற்றி அறியாதவர்கள். அகதிமுகாம்களில் பிறந்து அதற்குள்ளேயே தங்கள் உலகத்தைக் காண்கிறார்கள். அகதியாக்கப்பட்ட ஒருவரின் பிள்ளையும் அகதியாகப் பிறப்பது மிகவும் துயரம். அந்த முகாமின் அகதிக் குழந்தைகள் காலத்தின் துயரக் குழந்தைகளாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.



நெருக்கடிகளும் துயரங்களும் நிரம்பியது அகதி முகாம் வாழ்க்கை. அந்த வாழ்க்கையை வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட இந்த மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்றைய பிரச்சினை மிகவும் அவலமும் அடக்குமுறையும் கொண்டது. “எங்கேயாவது போங்கோ” என்று இந்த அகதிகளை அரசு துரத்துகிறது. அகதிகள் மௌனமாக இருப்பதே அரசாங்கத்திற்கு பிரச்சினையான விடயம். இலங்கை அரசாங்கம் ஈழத் தமிழினத்தை இல்லாமல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. அதைப்போலவே அகதிகளையும் இல்லாமல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட தனது அதிகாரிகளுக்கு கட்டளையிட்டிருக்கிறது. *நிலத்தை பறிக்கும் பொழுதும் நிலத்தை அபகரிக்கும் பொழுதும் நிலத்தை இழக்கும் பொழுதும் அந்த நிலத்தின் மக்கள் அகதிகளாகிறார்கள்.*

நிலத்தை மீண்டும் இந்த மக்களுக்கு வழங்காமல், மீண்டும் தங்கள் சொந்த ஊர்களில் மீள்குடியேற அனுமதிக்காமல், அகதி அடையாளங்களை பறிப்பதும் அகதி முகாம்களை விட்டு வெளியேறுங்கள் என்று சொல்வதும் என்ன நியாயம்? உண்மையில், இது எவ்வளவு இரக்கமற்ற செயல்? உலகில் எங்கேனும் அகதிகளுக்கு இப்படியொரு அநீதி இழைக்கப்படுகிறதா? தெருவுக்குத் தெரு வடக்கின் வசந்தம் என்றும் ஒரே தேசம், ஒரு குரல் என்றும் விளம்பரப் பலகைகள் நடப்பட்டிருக்கின்றன. அதன் மெய்யான அர்த்தம் இதுதானா? அந்த ஒரே குரல் அகதி முகாம்களை மூடும்படி உத்தரவிடுகிறதா?

“எங்கட மண்ணைச் சாப்பிட்டே நாங்கள் உயிர்வாழ்வோம். எங்கட வீடு, எங்கட கிணறு எல்லாத்தையும் இழந்து இந்த அகதிமுகாமில் வாழ்வது ஒரு வாழ்க்கையா?” என்று கேட்கிறார் இரத்னசிங்கம் ரஞ்சிதமணி. “எங்கட ஊர்க் கதைகளை கதைக்கும் பொழுது எங்கட கண்ணால கண்ணீர் ஓடும்” என்று அவர் சொல்லி முடித்த பொழுது கண்கள் நனைந்து போனது. காங்கேசன் துறையிலிருந்து பலாலிவரை வாழ்ந்த சனங்களின் கதைகள் இப்படித்தான் இருக்கின்றன. உயர்பாதுகாப்பு வலயம் என்று நிலம் அபகரிக்கப்பட்ட மக்களின் நிலைகள் இப்படித்தான் இருக்கின்றன. இன்று இலங்கை அரச படைகளதும் அவர்களது உறவினர்களதும் குடியேற்ற இடங்களாக, அவர்களது வாழிடங்களாகவும் மாறியுள்ள இந்த மக்களின் பூர்வீக நிலங்களில் இந்த மக்கள் வாழ்வதற்கு ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். இருபத்திரண்டு வருடம், இருபத்தைந்து வருடம் என்று பெருமூச்சு பொங்க நெடுங்காலத்தை கைகளை விரித்து,விரித்து எண்ணி ஏங்கியபடி இந்த மக்கள் இருக்கிறார்கள்...

(தொடரும்)

# தமிழீழ இராச்சியத்தில் அமெரிக்கரும் சிங்களவரும்

## சிங்கள ஊடகங்கள் கொந்தளிப்பு

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது மேற்சபைக்கான உறுப்பினர்களை அறிவித்துள்ள நிலையில் தமிழீழ இராச்சியத்தில் அமெரிக்கரும் சிங்களவரும் என தென்னிலங்கை சிங்கள ஊடகங்கள் கொந்தளித்துள்ளன.

அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபரான ராம்சி கிளார்க் மற்றும் சிங்களக் குடிமகனான மனித உரிமைவாதியான கலாநிதி ப்ராயன் செனவிரத்ன உட்பட ஒன்பது பேர் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மேற்சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட நிலையில் தென்னிலங்கையின் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் இச்செய்தியினை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுள்ளன.

சுதந்திர தமிழீழத்திற்கான வேட்கையினை ஜனநாயக வடிவமாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அனைத்துலக அரங்கில் உள்ள நிலையில் மேற்படி இருவரும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மேற்சபையில் பங்கெடுத்துள்ளமையானது தமிழீழம் என்ற ஈழத்தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டினை ஏற்றுக் கொண்டதாக கருத வேண்டியுள்ளதென சிங்கள ஊடகங்களின் அச்சத்தின் பின்னால் உள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபரான ராம்சி கிளார்க் அமெரிக்கச் சட்டத்திலும், அனைத்துலகச் சட்டத்திலும் துறை தோய்ந்த நிபுணராகத் திகழ்ந்தவர். சளைக்காத ஒரு குடிசார் உரிமைகள் ஆர்வலர் என்று பெயரெடுத்தவர்.

கடந்த நூற்றாண்டின் மிகப் பெரிய சட்டவாக்கச் சாதனைகள் என்று கருதப்படும் வாக்குரிமைச் சட்டம் 1965, சமூக உரிமைகள் சட்டம்1968 ஆகிய இரண்டையுமே உருவாக்கலிலும் நிறைவேற்றலிலும் முன்னின்று பணியாற்றிச் சரித்திரத்தில் தனக்கென்று ஒரு இடம் பிடித்தவர்.

அனைத்துத் தமிழராலும் உற்றதோர் நண்பனாகக் கருதப்பட்டவர். எமது உரிமைகள் எப்போது சரி, எங்கு சரி மீறப்படினும் தயங்காது எழுந்து நின்று குரல் தருபவர்.

சிங்கள குடிமகனாக கலாநிதி ப்ராயன் செனவிரத்ன இலங்கையில் ஒரு மருத்துவப் பேராசிரியராகத் தொழில் புரிந்தவர். கடந்த 20 ஆண்டுகளாக உலகெங்கும் சென்று பேரினவாத இலங்கை அரசின் கீழ் தமிழர் படும் அல்லல்களைப் புட்டுக்காட்டிக் கொண்டிருப்பவர். இலங்கையின் மனித உரிமைகள் வதம் பற்றி நூற்றுக்கணக்கான கட்டுரைகளை வரைந்தவர்.

சர்வதேச அரங்கில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வலுப்பெற்று வருவது இலங்கை அரசுக்கு கடும் நெடுக்கடியாகவுள்ள நிலையில் அறிவிக்கப்பட்டுள்ள மேற்சபை நியமனங்கள் இன்னுமொரு நெருக்கடியினை ஏற்படுத்தும் என்பதன் வெளிப்பாடாகவே சிங்கள ஊடகங்களின் கொந்தளிப்பினை கவனிக்க முடியுமென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (அ-2)

## தீ பரவுவதைக் கட்டுப்படுத்த தீயணைப்பு வாகனங்கள்

காடுகளில் தீ பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களுக்கு தீயணைப்பு வாகனங்களை பெற்றுக் கொடுக்க சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய பதுளை, மொனராகலை உள்ளிட்ட மேலும் சில பிரதேசங்களுக்கு இந்த தீயணைப்பு வாகனங்கள் வழங்கப் படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் டி.எம். யூ.ரி பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

இயற்கை காடுகளை உரிய முறையில் பராமரிப்பது தொடர்பாக மக்களை தெளிவுபடுத்தி அவற்றைப் பாதுகாப்பதற்கான விரிவான திட்டமொன்றை தயாரித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த திட்டத்திற்காக பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# தமிழ்த் தேசியத்தின் மீது மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளனர்

## பொன்.செல்வராசா எம்.பி. தெரிவிப்பு

**கிழக்கு மாகாணத்திலே தெரிவு செய்யப்பட்ட அத்தனை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து தெரிவு செய்து தமிழ் தேசியத்தின் மீது கொண்டுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையை வெளிக்காட்டினார்கள் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.**

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து வாகரை பிரதேசத்தில் வேட்பாளர் ப.சிவநேசன் தலைமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த நாட்டிலே இருக்கின்ற வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் தலைவர்கள் யார் என்பதை நிர்ணயிக்கின்ற ஒரு தேர்தலாக 2010 ஆம் ஆண்டுநடைபெற்ற பொதுத் தேர்தல் இருந்தது.

அந்த தேர்தலில் வடக்கு, கிழக்கிலே வாழ்கின்ற தமிழ் மக்கள் மீண்டும் எமது அரசியல் தலைமைகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரே என்று 14 பேரை பாராளுமன்றம் அனுப்பியதன் மூலம் நிரூபித்து காட்டினார்கள்.

இந் நாட்டை கட்டி எழுப்புகின்ற இந்த வடக்கு, கிழக்கு மாகாணம் கடந்த போராட்ட காலங்களில் சோகை இழந்திருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டி முதலமைச்சராக வந்த எமது பகுதியைச் சேர்ந்தவர் நான்காண்டு காலமாக என்ன செய்தார்கள்?

வெறும் அபிவிருத்தியை மட்டும் செய்தார்கள் என்று கூறுவதைத் தவிர தமிழ் மக்களின் உரிமைக்காக எங்காவது நான்காண்டு காலத்திலே ஒரு நாளாவது குரல் கொடுத்தார்களா?


இவர்களுக்கு பேசுவதற்கு ஒன்றுமில்லை. அரசியல் விளக்கம், அரசியல் சித்தாந்தம், கட்சியின் கொள்ளை இந்த விடயங்களை இவர்களால் சொல்ல முடியாது. இவர்களுக்கு உள்ள ஒரே தாரக மந்திரம் அபிவிருத்தி மட்டும் தான்.

எந்த தமிழ் அரசியல்வாதியாவது அரசாங்கத்துடன் இருந்து கொண்டு தமிழ் உரிமைக்காக போராடிய வரலாறு கிடையாது. இவர்களுக்கு சரித்திரத்தில் இடமே இல்லை.

தமிழ் மக்கள் ஜனநாயக வழி மற்றும் ஆயுதவழி போராட்டங்களை 60 ஆண்டுகளுக்கு மேலாக அங்கீகரித்துள்ளதன் மூலம் அபிவிருத்திக்கு எப்போதுமே அடிபணிய மாட்டார்கள் என்பதை கடந்தகால வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன என தெரிவித்தார். (அ-2)



யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஆங்கில தகுதியுடைமை மற்றும் தொடர்பாடல் திறன் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் வட மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனப்பணிப்பாளர் சி.கிருஸ்ணானந்தன் உரையாற்றுவதையும் GIZ நிறுவன ஆலோசகர் சாய்கி கென்னெற், பொறியியலாளர் எம்.சூரியசேகரம் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.







# மாயப்பாட்டியின் முத்துமாலை

நெடுஞ்காலத்துக்கு முன் எகிப்தில் ஷகானா என்னும் இளவரசி இருந்தாள். ஒருநாள் அவள் தன் தோழிகளுடன் அரண்மனைக்குப் பக்கத்தில் உள்ள நீரூற்றில் குளிக்கச் சென்றாள். குளித்து முடித்து ஷகானா கரையேறினாள். அப்போது ஒரு பாட்டி நீரூற்றின் கரையில் நின்று கொண்டு இருந்தாள்.

ஏய்! கிழவி உனக்கு இங்கே என்னவேலை? இது எங்களைப் போன்ற அழகான இளவரசிகள் குளிப்பதற்கான இடம். சீக்கிரம் இங்கே இருந்து போய்விடு என்று இளவரசி கோபத்துடன் சொன்னாள்.



அதைக்கேட்டு அந்தப் பாட்டி சிரித்தவாறு அருகே வந்தாள். அழகான இளவரசியே இப்போது இருப்பபை தவிட நீ இன்னும் அழகாக ஆகவேண்டுமா? அப்படியென்றால் இந்த மந்திர முத்துமாலையை அணிந்துகொள் என்று ஷகானாவிடம் ஒரு முத்துமாலையைக் கொடுத்தாள்.

இவ்வளவு அழகான முத்துமாலையை நான் இதுவரை பார்த்ததே இல்லை என்று சொன்ன ஷகானா அதைக் கழுத்தில் அணிந்து கொண்டாள்.

அடுத்தநொடி ஷகானாவின் கையும் காலும் குறுகிச் சுருங்கின. அவள் மிகவும் வயதான முதியவள் ஆகிவிட்டாள். இந்தக் காட்சியைக் கண்ட இளவரசியின் தோழிகள் பொங்கி அழுதார்கள். அவர்கள் இளவரசியை அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள். விபரம் அறிந்த ராஜா கோபமானார்.

என் மகளை ஏமாற்றி இந்த நிலைக்கு ஆளாக்கிய அந்தக் கிழவியை சீக்கிரம் பிடித்து சிறையில் அடையுங்கள் என்று கட்டளையிட்டார்.

பாட்டியைப் பிடிப்பதற்காக தளபதி சில வீரர்களுடன் நீரூற்றுக்கு வந்தான். அப்போது அந்தப் பாட்டி மெதுவாக வானில் பறந்து செல்வதைப் பார்த்தான்.

ராஜாவிடம் விரைந்து சென்ற தளபதி, ராஜாவே! அந்தக்கிழவி ஏதோ பெரிய சூனியக்காரி போல இருக்கிறது. அவளைப் பிடிப்பது அவ்வளவு சுலபமல்ல என்றான்.

அந்தச்சூனியக்காரியைக் கண்டு பிடித்து என் மகளை முன்பு இருந்ததுபோல மாற்றுபவர்களுக்கு நான் ஆயிரம் தங்க நாணயங்கள் தருவதாக விளம்பரம் செய்யுங்கள் என்றார் ராஜா. அப்படியே விளம்பரம் செய்யப்பட்டது.

செய்தியறிந்த பலரும் அந்தச் சூனியக்காரியைத் தேடி அலைந்தார்கள். ஆனால் எவராலும் கண்டுபிடிக்கமுடியவில்லை. அப்போது தான் வெளிநாட்டில் வசிக்கும் ஷாகித் என்ற இளைஞன் அந்தத் தகவலையறிந்தான்.

ஷாகித் அன்றே சூனியக்காரியைத் தேடிப்புறப்பட்டான். அவனுக்கு அதிர்ஷ்டம் இருந்தது. அவன் நீரூற்றை நெருங்கியபோது பாட்டி அங்கேயிருப்பதைப் பார்த்தான்.

பாட்டி ஒரு பாறையில் சாய்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். பக்கத்தில் இருந்த மூட்டையில் முத்துமாலையும் இருந்தது.


இப்படிப்பட்ட ஒரு முத்துமாலை தான் இளவரசியைக் கிழவியாக மாற்றியிருக்கும். நான் இந்த முத்துமாலையை அணிந்து ஒரு கிழவனாகிறேன் என்று நினைத்தான் ஷாகித். நொடிப்பொழுதில் அந்த மாலையை எடுத்து அணிந்து கொண்டு கிழவனாகி விட்டான். அப்போது பாட்டி கண் விழித்தாள்.

முத்துமாலையையும் இளைஞனையும் பார்த்து நீயேன் இந்த மாலை அணிந்து கிழவனானாய் என்று கேட்டாள். ஷாகித் தந்திரமாகப் பேசினான். மன்னிக்க வேண்டும்.

நான் ஒரு ஏழை. எனக்கென்று யாருமில்லை. எனவே மிகவும் சீக்கிரம் இறந்துவிட விரும்புகிறேன். கிழவனாகி விட்டால் சீக்கிரம் இறந்து விடலாம் என்று முத்துமாலையை அணிந்து கொண்டேன். ஆனால் இப்போது நான் செய்தது தவறு என்று புரிகிறது என்று சொல்லி போலியாக அழுதான்.

பாட்டிக்கு அவன் மீது இரக்கம் ஏற்பட்டது. தம்பி வருத்தப்படாதே! உனக்கு நான் உதவி செய்கிறேன் என்று சொல்லி வேறு ஒரு முத்துமாலையைக் கொடுத்தாள்.

அவன் அதை அணிந்ததும் முன்பு இருந்தது போன்று இளைஞனாக மாறினான். பின்பு பாட்டிக்கு நன்றி சொல்லி புறப்பட முற்பட்டான். அப்போது பாட்டி, நீ இப்போது எங்கே செல்கிறாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் இளவரசியின் கழுத்தில் இந்த முத்துமாலையை அணிவிப்பதற்கு முன் அவளுக்குச் சாட்டையால் பத்து அடி கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் அவள் பழைய உருவத்தைப் பெறுவாள் என்றாள்.



அரண்மனையை அடைந்த ஷாகித் ராஜாவே! எனக்கு அனுமதி கொடுங்கள். உங்கள் மகளை முன்பு இருந்தது போன்று அழகியாக்குகிறேன் என்று ராஜாவிடம் சொன்னான்.

ராஜா உடனடியாக அவனைத் தன் மகளிடம் அழைத்துச் சென்றார். ஷாகித் தன் கையில் இருந்த சாட்டையால் இளவரசியை அடிக்கத் தொடங்கினான். பாவம் இளவரசி வேதனை தாழாமல் துடித்தாள்.

மகள் படும் துன்பத்தைப் பார்த்து மனம் கலங்கிக் கண்ணீர் வடித்தார் ராஜா. அடிபட்ட இளவரசி மயங்கி விழுந்தாள். அந்த நேரத்தில் ஷாகித் பாட்டி கொடுத்த முத்துமாலையை இளவரசியின் கழுத்தில் அணிவித்தான். அடுத்த நொடியே அவள் பேரழகியாக எழுந்தாள்.

ராஜா மகிழ்ந்தார். இளைஞனே! நீ அந்தச்சூனியக்காரியையும் பிடித்துக்கொண்டு வந்தால் உனக்கு ஆயிரம் தங்க நாணயங்கள் பரிசளிக்கிறேன் என்றார். அப்போது இளவரசி முன்னால் வந்து வேண்டாமப்பா! என் ஆணவப் பேச்சுத் தான் ஆபத்தில் சிக்கவைத்தது. அந்தப் பாட்டிக்குத் தண்டனை கொடுக்கவேண்டாம். என்னைக் காப்பாற்றிய இவருக்கு உடனே பரிசு கொடுக்க வேண்டும். அதோடு இவரையே நான் திருமணம் செய்து கொள்ளவும் விரும்புகிறேன் என்று சொன்னாள். அவள் விருப்பத்திற்கு ராஜாவும் சம்மதம் தெரிவித்தார். ஷகானா மற்றும் ஷாகித்தின் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் அமைப்பிற்கு இடையூறு ஏற்படுத்தவில்லை

## திட்டவட்டமாக மறுக்கிறது வலி.தெற்கு மேற்கு பிரதேசசபை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டு வரும் நிலையில் வலி. தெற்கு மேற்கு பிரதேசசபை இடையூறு ஏற்படுத்துவதாக எழுந்த குற்றச்சாட்டை பிரதேச சபையின் ஆளும்கட்சி உறுப்பினர்கள் மறுத்துள்ளதோடு சட்ட விரோதமாக ஆலயத்தை அமைக்கும் முயற்சியில் அதன் நிர்வாகத்தினர் ஈடுபட்டுள் ளதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

வலி.தெற்கு மேற்கு பிரதேச சபையின் உப அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே ஆளும்கட்சி உறுப்பினர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

வலி. தெற்குமேற்கு பிரதேச சபையின் உப தலைவர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தவிசாளர் ஆ.ஜெபநேசன் உட்பட ஏனைய ஆளும் கட்சி உறுப்பினர்கள் பங்கு கொண்டிருந்தனர்.

ஊடகவியலாளர் சந்திப்பு ஆரம்பிக்கப் பட்டபோது உப தவிசாளர் எஸ். சிவகுமார் தலைமையில்தான் இந்தச் சந்திப்பு நடைபெற வேண்டும் என உறுப்பினர்.க. கௌரிகாந்தன் தெரிவித்தார்.

இதனால் சந்திப்பிற்கு யார் தலைமை தாங்குவது என்ற வாக்குவாதம் இடம் பெற்றது. பின்னர் ஒரு வழியாக தலைமை தாங்குவதிலிருந்து தவிசாளர் விலகிக் கொள்ள உப தவிசாளர் தலைமையில் சந்திப்பு நடைபெற்றது.

ஆரம்பத்திலேயே மருதடி விநாயகர் ஆலயம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் உறுப்பினர்களினால் கருத்து முன்வைக்கப்பட்டது. இதன்போது கடந்த காலத்தில் ஊடகங்களில் மருதடி விநாயகர் ஆலய கட்டட நிர்மாணப்பணிகள் தொடர்பில் வெளியான செய்திகளுக்கு விளக்கம் அளிக்கப் பட்டது.

இதன்போது உறுப்பினர் கௌரிகாந்தனால் மருதடி விநாயகர் ஆலய கட்டட நிர்மாணப்பணிகள் சட்டவிரோதமாக இடம் பெற்று வருகிறது. பிரதேச சபையிடம் அனுமதி எடுக்கவும் இல்லை. பிரதேச சபை அனுமதி கொடுக்கவும் இல்லை என்றார்.

வீதி அகலிப்பு காரணமாகவும் சட்டவிரோதமாக கட்டப்பட்ட ஆலயங்கள் எனக் கூறியும் ஆலயங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் மருதடி விநாயகர் ஆலயத்திற்கும் அவ்வாறான நிலை ஏற்படலாம். மருதடி விநாயகர் ஆலயமும் முற்றாக அழிக்கப் படவாய்ப்புள்ளது.அப்போது அந்தக் குற்றச் சாட்டை ஏற்க வேண்டிய நிலை பிரதேச சபைக்கு வரும் என்பதனால் அனுமதியெடுத்த பின்பு ஆலய கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிலையில் கோயில் கோபுரத்தை இடிக்க நாம் சதித்திட்டம் தீட்டுவதாக பொதுமக்களிடையே எம்மைப்பற்றி பொய்ப்பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை, மருதடிவிநாயகர் ஆலயம் அமைக்கும் பணி கடந்த 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்று வருகிறது எனவும் எமது சபை பொறுப்பேற்க முன்னரே கோயில் அமைக்கும் பணி ஆரம்பிக் கப்பட்டு விட்டது. அப்போது அனுமதி எடுக்க வில்லை என்பது உண்மை.

ஆனால், கோவில் அமைக்கும் பணி முழுமையடையும் நிலையில் அதனை சட்டத்தினைக் கொண்டு தடுக்க நான் முயற்சிக்க வில்லை.இதன்காரணமாக இந்து சமய பேரவையிடம் முறையிட்டேன். அத்தோடு நான் இந்து சமயம் சார்ந்தவன் அல்ல. என்பதால் இந்து சமய பேரவையிடம் இந்த விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தேன்.

மக்களுக்காகவே சட்டம். மக்கள் நலன் சார்ந்தே சட்டத்தை முன்னெடுக்க நடைமுறைப்படுத்த முடியும் என தவிசாளர் ஆ.ஜெப நேசன் தெரிவித்தார். (அ-6)

# சந்திரகாந்தன் மீண்டும் முதல்வராக வாய்ப்பில்லை

## ஆங்கில ஊடகம் தகவல்

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மீண்டும் முதல்வராக வாய்ப்புக் கிடைக்காது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இத்தேர்தல் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்றால் சந்திரகாந்தன் மீண்டும் முதல்வராக வாய்ப்பில்லை என ஸ்ரீறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் இந்தத் தேர்தலில் பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரனின் சகோதரி ருத்ரமலர் ஞானபாஸ்கரன் போட்டியிடுவதால் மீண்டும் முதல்வராகும் வாய்ப்பு சந்திரகாந்தனுக்கு மறுக்கப்படலாம் என்று கூறியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ்மட்டத் தலைவர்கள் ருத்ரமலருக்காக பரப்புரைகளை செய்துவரும் அதேவேளை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் பலரும் கருணாவுக்கு ஆதரவு வழங்குவதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் இருந்து பலர் வெளியேறியுள்ளதை அடுத்து கிழக்கில் சந்திரகாந்தனின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மேற்கொண்ட ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் கொழும்பு ஆங்கில ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# தேர்தல் சட்டங்களை மீறிய 104 சம்பவங்கள் பதிவாகின

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறிய 104 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

[illegible] முறைச் சம்பவங்களும் 52 தேர் [illegible] மீறிய சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் முறைகேடுகள் அதிகளவில் அரச கட்சிகளினால் மேற்கொள்ளப்படுவதாகவும் தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இச் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸார் பக்கச் சார்பாக நடந்து கொள்வதாக அம் மத்திய நிலையம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, தேர்தல் சட்டங்களை மீறிய 84 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (அ-2)



THE CHARIKA LEARNERS


த சாரிகா லேணர்ஸ்

THE CHARIKA LEARNERS

A Grade Driving School-RegNo-354

இலங்கையில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தனது கிளைகளைப் பரப்பியுள்ள 31 வருடகால அனுபவமுள்ளதும் இன்னும் பல்லாயிரக்கணக்கான சாரதிகளைப் பயிற்றுவித்த எமது த சாரிகா லேணர்ஸ் சாரதி பயிற்சிப் பாடசாலையானது இலகு ரக வாகனத்திலும் கன ரக வாகனத்திலும் முதல் முதலாக ஏறி ஓட்டும்போது ஏற்படக்கூடிய பதற்றத்தை/ பயத்தைத் தவிர்ப்பதற்காக இதில் காட்டப்பட்டுள்ள இயந்திரத்தில் அடிப்படைத் தொழில்நுட்ப பயிற்சிகளையும் அறிவுரைகளையும் வழங்கிய பின்னரே வாகனத்தில் ஏற்றிப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.





பதிவுகளை மேற்கொள்ள மற்றும் தொடர்புகளுக்கு இன்றே நாடுங்கள்

த சாரிகா லேணர்ஸ் பயிற்சிப் பாடசாலை

57, வேம்படிவீதி, யாழ்ப்பாணம்,

தொ.பே:-0215100200

(யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட தேசிய பாடசாலைக்கு முன்பாக)



தலைமைக் காரியாலயம்:- அநுராதபுரம்-0252223642


யாழ்ப்பாணம்:-0215100200

கன்னாதிட்டிக்கிளை:-0215675556

(கன்னாதிட்டி மக்கள் வங்கி அருகிாமை)

(785)

# பிளாட்டினம் சுரங்கத்தில் மோதல்; துப்பாக்கி சூட்டில் 34 பேர் பலி



(ஜோகன்னஸ்பர்க்)

தென் ஆபிரிக்காவில் பிளாட்டினம் சுரங்கத்தின் தொழிலாளர்களின் போராட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 34 பேர் பலியாகினர்.

தங்கத்தை விட விலை உயர்ந்த உலோகம் பிளாட்டினம். தென் ஆபிரிக்காவின் பிரிட்டோரியா மாகாணத்திலுள்ள மாரிக்கானா பகுதியில் உள்ள சுரங்கத்தில்தான் உலகிலேயே அதிக அளவில் பிளாட்டினம் வெட்டி எடுக்கப்படுகிறது.

இங்கு பணியாற்றும் சுரங்கத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி கடந்த ஒரு வாரமாகப் போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் 2 தொழிலாளர் சங்கத்தினருக்கிடையே மோதல் வெடித்தது. ஒரு தரப்பினர் நவீன ஆயுதங்களை வைத்து எதிர்த் தரப்பினரையும் பொலிஸாரையும் தாக்க ஆரம்பித்தனர். இந்த மோதலைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 34 பேர் கொல்லப்பட்டனர். 78 பேர் படுகாயமடைந்து உள்ளனர்.

தென் ஆபிரிக்காவில் ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின்னர் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அதிகளவானோர் பலியானது இந்தச் சம்பவத்தில்தான் எனக் கூறப்படுகிறது. (அ-2)

# சிரிய பிரச்சினையை தீர்க்க அடுத்த தூதரும் களத்தில்

(நியூயோர்க்)


சிரியாபிரச்சினைக்கு தீர்வு காண ஐ.நா. சபை மற்றும் அரபு நாடுகளின் சிறப்பு தூதராக கோபி அனான் நியமிக்கப்பட்டு முயற்சி மேற்கொண்டார். ஆனால், அவரது திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. இதனால் அவர் பதவி விலகினார். இவருக்குப் பதிலாக யாரை நியமனம் செய்வது என்பதில் குழப்பம் நிலவியது.

இதற்கிடையில் சிரியாவில் சர்வதேச கண்காணிப்பாளராக செயற்படும் அல்ஜீரியாவைச் சேர்ந்த பராஹிமியை நியமிக்க ஐ.நா. சபை முடிவு செய்தது.

முதலில் தயக்கம் காட்டிய அவர் தற்போது பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வந்துள்ளார்.

இவரது நியமனம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை ஐ.நா. விரைவில் வெளியிடும் என தெரிகிறது. சிரிய பிரச்சினையை தீர்க்க அவர் புதிய அணுகுமுறையை கடைப் பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# சுற்றுலா விடுதியில் தீ; 4 பேர் உடல் கருகி பலி



(பாங்கொக்)

தாய்லாந்து நாட்டில் சுற்றுலாப் பயணிகளை கவரும் விதமாக பல தீவுகள் அமைந்துள்ளன. அங்கு கடற்கரை பகுதிகளில் ஏராளமான சுற்றுலா விடுதிகள் இயங்குகின்றன. இந்த பகுதியை பார்வையிடுவதற்காக ஆண்டிற்கு சுமார் 2 கோடி பேர் செல்கிறார்கள்.

இந்நிலையில் அங்குள்ள புகெட் என்ற தீவில் உள்ள கடற்கரை விடுதியில் நேற்று முன்தினம் அதிகாலை திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது. இதில் 2 பெண்கள் உட்பட 4 பேர் உடல் கருகி பலியானார்கள்.

மேலும் 11 பேர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

உடல்கள் மிகவும் உருக்குலைந்து விட்டதால் பலியானவர்கள் அடையாளம் தெரியவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். காயம் அடைந்தவர்களில் 4 பேர் பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் கவலைக்கிடமாக இருப்பதாகவும் பொலிஸார் கூறினர்.

சம்பவம் நடப்பதற்கு சற்று முன்பு பலத்த மழை பெய்துள்ளது. இதில் அருகிலுள்ள மின்சார ட்ரான்ஸ்பார்ம் வெடித்து தீப்பிடித்து அது விடுதிக்கும் தாவி விட்டதாக கூறப்படுகிறது. (அ-2)

# தீவிரவாதிகளை ஒடுக்குவது தொடர்பில் அமெ.-பாக். இராணுவ தளபதிகள் ஆலோசனை

(இஸ்லாமாபாத்)

தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவது குறித்து அமெரிக்கா, பாகிஸ்தான் இராணுவ தளபதிகள் சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தினார்கள்.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள மலைப்பிரதேசங்களில் தலிபான்கள், அல்கொய்தா, ஹக்கானி போன்ற தீவிரவாத அமைப்புகள் முகாமிட்டு செயற்படுகின்றன. இந்த தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல்களை நடத்துகிறார்கள்.

இருப்பினும் சமீபத்தில் தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித்து வருகிறது.

இதனால் அமெரிக்க இராணுவ மந்திரி லியான் பெனட்டா தலிபான்களுக்கு எதிராக பாகிஸ்தான் புதிய தீவிர தாக்குதல் நடத்த வேண்டும் என்று அறிவுரை கூறினார். இந்நிலையில் பாகிஸ்தானில் உள்ள கம்ரா விமானப்படை தளத்தில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நுழைந்து திடீர் தாக்குதல் நடத்தினார்கள்.

இதன் தொடர்ச்சியாக அமெரிக்க இராணுவ மத்திய கொமாண்டர் ஜெனரல் ஜேம்ஸ் மாத்திஸ் நேற்று முன்தினம் இஸ்லாமாபாத் சென்றார். அங்கு அவர் பாகிஸ்தான் இராணுவத்தளபதி கயானி, முன்னாள் இராணுவ செயலாளர் ஆசிப் யாசின் மாலிக் மற்றும் மூத்த இராணுவ தளபதிகள், அதிகாரிகள் ஆகியோரை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

அப்போது ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் செயற்படும் தீவிரவாதிகளை ஒடுக்க எந்தெந்த வகையில் தீவிர நடவடிக்கை மேற்கொள்வது, அது வெற்றிகரமாக நடத்துவதற்கான ஒத்துழைப்பு வழங்குவது ஆகியவை குறித்து விவாதித்தார்கள். பின்னர் அமெரிக்கத் தூதுரகம் வெளியிட்ட அறிக்கையில் பொதுவான பாதுகாப்பு நிலவரம், தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கை, அதில் ஒத்துழைப்பை அதிகரிப்பது ஆகியவை குறித்து பேச்சு நடைபெற்றது என தெரிவித்தது.

அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க இரு நாட்டு அதிகாரிகளும் ஒப்புக்கொண்டதாக மற்றொரு தகவல் கூறுகிறது. ஆனால், எத்தகைய நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கை தொடர்பாக நடந்த தாக்குதல்களில் இதுவரையில் பாகிஸ்தானை சேர்ந்த 5 ஆயிரம் வீரர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களுக்கு அமெரிக்க இராணுவ தளபதி ஜேம்ஸ் தனது இரங்கலை தெரிவித்தார். (அ-2)

# எரிபொருள் நிரப்புவதற்கு பயணிகளிடம் பணம் வசூலித்த விமான நிறுவனம்

(பாரிஸ்)

விமானத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக பிரான்ஸ் நாட்டு விமான நிறுவனம் பயணிகளிடம் பணம் வசூலித்துள்ளது.

பாரிசிலிருந்து லெபனான் நாட்டின் பெய்ரூட் நகரத்தை நோக்கி ஏர் பிரான்ஸ் விமானம் கடந்த 15 ஆம் திகதி இரவு புறப்பட்டது. விமானத்தில் எரிபொருள் குறைவாக இருந்த காரணத்தால் இந்த விமானம் அவசரமாக சிரியாவின் டமாஸ்கஸ் நகரில் தரையிறங்கியது.

சிரியா மீது பிரான்ஸ் நாடு பொருளாதார தடை விதித்துள்ளதால் ஏர் பிரான்ஸ் நிறுவன, கிரெடிட்கார்டு சிரியாவில் செல்லாது. மீண்டும் விமானம் புறப்பட வேண்டும் என்றால் எரிபொருள் நிரப்பியே ஆக வேண்டும். வேறு வழியில்லாததால் பயணிகளிடம் பணம் வசூலிக்க முடிவு செய்தனர் விமான ஊழியர்கள். உங்களிடம் உள்ள பணத்தை கொடுத்தால்தான் விமானம் புறப்படும் என்றதால் பயணிகளும் சங்கடத்துடன் தங்களிடம் உள்ள பணத்தை கொடுத்தனர்.

இந்த பணத்தை கொண்டு எரிபொருள் நிரப்பப்பட்டதும் விமானம் பெய்ரூட் நகருக்கு புறப்பட்டது.

பயணிகளிடம் அவசரத்துக்கு பணம் வசூல் செய்ததற்காக ஏர் பிரான்ஸ் நிறுவனம் வருத்தம் தெரிவித்துள்ளது. (அ-2)



டொமினியின் குடியரசு நாட்டின் புதிய ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள டானிலோ மெடினா (இடது)வின் பதவியேற்பு விழாவில் பதவிவிலகி செல்லும் லியோனெல்பெர்னாண்டஸ் கட்டித்தழுவி மகிழ்ச்சி தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.




# ஆண்களுக்கும் கருத்தடை மாத்திரை தயாரானது

குழந்தைபேறு தடுக்க தற்போது பெண்களுக்கு மட்டுமே கருத்தடை மாத்திரை உள்ளது. கர்ப்பத்தை தடுக்க அவற்றை பெண்கள் சாப்பிட்டு வருகின்றனர். இதனால் பலர் பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர்.

இதை தடுக்க ஆண்களுக்கும் கருத்தடை மாத்திரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஜே.கியூ.1 என விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர்.

இம் மாத்திரைகளை தினசரி அல்லது வாரத்தின் ஒருநாள் மட்டுமே எடுத்துக் கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு ஆண்களுக்கு கண்டுபிடிக்கப்பட்ட கருத்தடை மாத்திரைகள் தோல்வியில் முடிந்தது.

ஆனால், தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள மாத்திரை மிகவும் பாதுகாப்பானது. பக்க விளைவுகள் எதுவும் இல்லாதது என விஞ்ஞானி ஜேம்ஸ் பிராட்னர் தெரிவித்துள்ளார்.

தற்போது புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த கருத்தடை மாத்திரைகள் ஆண் எலிகளிடம் வெற்றிகரமாக பரிசோதனை நடத்தப்பட்டது. இருந்தாலும் இன்னும் அது பரிசோதனையில் உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# நல்லூர் உற்சவத்திற்காக மாமிசம் தவிர்த்த பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலப் பணிக்காக மாமிசம் உண்பதை பொலிஸார் கைவிட்டனர் என யாழ்.பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸார் அதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

இம்முறை நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தில் திருட்டுச் சம்பவங்கள் கடந்த காலங்களைப் போன்று இடம்பெறவில்லை.

திருவிழா ஆரம்ப நாளான கொடியேற்றத் திருவிழாவின்போது 4 தாலிக் கொடிகள் திருடப்பட்டதாக முறைப்பாடு கிடைத்தது.

பின்னர் எந்தவிதத் திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறவில்லை. அதற்குக் காரணம் யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேராவின் வேண்டுகோளுக்கு இணங்க பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதே.

இம்முறை பொலிஸ் உடையில் பணி புரிந்தவர்களை விட பக்தர்களோடு பக்தர்களாக வேட்டி; சேலையில் ஆண், பெண் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதனால் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடிந்தது. எதிர்காலத்திலும் இவ்வாறான சேவையை வழங்க பொலிஸார் தயாராகவுள்ளனர்.

அத்தோடு பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் இன்று நல்லூரில் விசேட பூஜையும் நடத்தப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# தங்கமுலாம் பூசப்பட்ட நகையை வங்கியில் அடைவுவைத்து பணமோசடி

## யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள வங்கியொன்றில் தங்கமுலாம் பூசப்பட்ட நகையினை அடைவு வைத்து பணமோசடி இடம்பெற்றுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வங்கியில் வைக்கப்பட்ட அடைவு நகைக்கான காலம் முடிவடைந்ததனால் வங்கியாளர்கள் அதனை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொண்டபோதே அது தங்கமுலாம் பூசப்பட்ட நகை என்பது தெரியவந்தது.

இதனையடுத்து கடந்த 13ஆம் திகதி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் வங்கியாளர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-6)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயரமுத்த மற்றும் தாழமுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயரமுத்த மின்மார்க்கங்களை இணைப்பதற்காகவும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ-9)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### கண்டோர்க்குங் குறையுண்டோ

போற்றியொரு பொல்லாப்பு மில்லையென்றே
பூங்கழல்க ளவைபோற்றி புவியுள் ளோர்கள்
ஏற்றுகின்ற திருவடிக ளென்றும் போற்றி
எளியேனை யாண்டுகொண்ட கருணை போற்றி
சாற்றரிய மலர்ச்சோலை தயங்கு கின்ற
தண்புனல்சேர் நல்லூரிற் குருவாய் வந்து
வீற்றிருந்தென் வினைதீர்த்த விமலா வுன்னை
வேறாக எண்ணுதற்கு விதியு முண்டோ



# வாழும் உணவாகிய இயேசுவை உட்கொள்வதன்மூலம் புதிய மனிதராக மாறுவோம்

நம்வாழ்வில் சில காரியங்கள் நம்பமுடியாத ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றன. எனது சதை உண்மையான உணவு, எனது இரத்தம் உண்மையான பானம் என்று இயேசு சொன்னது யூதர்களுக்கு நம்பமுடியாத ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்

வைத் தாண்டி இன்று முடிவுற்ற உணவு தானே என்பதை இயேசு எடுத்துரைக்கின்றார்.

நிலையாக நிறைவு தரும் விண்ணக உணவாகிய தன்னை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அழைப்பு விடுக்கிறார். யூதமக்கள்; பாலை நிலப் பயணத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட

அவர்களால் அதற்கான பசியை உணர முடியவில்லை. அவர்களது இதயத்தின் வாயில் நோய் உள்ளது. உண்மையில் இந்த உணவு மனிதனின் உள்ளார்ந்த பசியைப் போக்கும்.



அகுஸ்தீன் மேலும் கூறுகிறார். வாழும் உணவாகிய இயேசுவை உண்ண வேண்டும். அவரை உண்பதன் மூலம் காணமுடியாத மறுபிறப்பை அடைந்து புதிய மனிதராக மாற முடியும். விண்ணகத்தில் இருந்து இறங்கி வந்த வாழும் உணவாகிய இயேசுவால் நாம் ஆழமாகப் புதுப்பிக்கப்படுவோம்.

## பரமபிதா காட்டிய பாதை

கள்.

ஆனால் அவருடைய சதையும் இரத்தமும் ஓர் அடையாளத்தைத் தருகின்றன. இவ்வாறு இயேசு தமது உடலையும் இரத்தத்தையும் நற்கருணை எனும் அருட்சாதனமாகச் சித்திரிக்கிறார்.

எனவே இது யூதர்களுக்குப் புரிந்து கொள்ளமுடியாத ஆச்சரியத்தை அளித்தது. இயேசு நற்கருணையை ஏற்படுத்தியது நமக்கு நம்புகிற ஆச்சரியம், அற்புதம். இது விண்ணினின்று இறங்கி வந்த உணவு, மன்னாவை உண்டவர் இறந்தனர். இதை உண்ணும் நாம் இறப்பதில்லை. மாறாக இயேசுவோடும் தந்தையோடும் இணைந்து விடுதலையும் வாழ்வும் பெறுவோம்.

ஐந்து அப்பங்களை பலுகச் செய்து ஐயாயிரம் பேருக்கு உணவளித்த பின் நிலைவாழ்வு தரும் உணவைப்பற்றி இயேசு பேசுவதை இன்றைய நற்செய்தி எடுத்துரைக்கிறது. இறைவனால் வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிச் செல்லும் பாதையில் இஸ்ரயேல் மக்களுக்கு வானிலிருந்து மன்னா எனும் உணவு வழங்கப்பட்டதை நாம் அறிந்திருக்கின்றோம். தன்னிடம் வந்த பெருந்திரளான மக்களுக்கு மன்னா

நாட்டை அடையும் வரை அவர்களுக்கு மன்னா வாழ்வளித்தது. இப்பொழுது இயேசு விண்ணகத்தில் இருந்து இறங்கி வந்த வாழ்வளிக்கும் உணவாகிய தன்னைப்பற்றி பேசுகிறார். அவரே நிலைவாழ்வு தரும் உணவு, தந்தையின் அன்புக்குரிய அவரில் மனிதரின் வாழ்வு முழுமையைக் காண்கிறது.

கடவுளின் திருவுளத்தை அறிந்து வாழ்வின் சரியான பாதையை கண்டு கொள்ள உதவும் மோசேயின் சட்டத்தில் இருந்த கடவுளின் வார்த்தையே வானிலிருந்து இறங்கி வந்த உண்மையான உணவு என்பது யூதர்களின் எண்ணம். தானே கடவுளின் வார்த்தை. மனித உடலெடுத்து வார்த்தை என்பதை அவர் தெளிவுபடுத்துகிறார்.

இன்றைய நற்செய்திப் பகுதியில் காணப்படும் யூதர்களைப்போல இயேசுவின் இறைதன்மையில் சந்தேகம் கொள்வது கடவுளின் செயலை எதிர்ப்பதாகும். மனித தோற்றங்களைத் தாண்டிச் சென்று மனித உடலெடுத்து கடவுளின் வார்த்தையை ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுக்கிறார்கள்.

புனித அகுஸ்தீன் இவ்வாறு விளக்குகிறார். அவர்கள் அந்த விண்ணக உணவில் இருந்து தூரமாக இருந்தார்கள்.

ம.பிரான்சீஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

நற்கருணை மனிதனை இயேசுவின் இறைவாழ்வில் ஐக்கியமாக்குகிறது. அவன் இயேசுவின் அடிச்சுவடுகளை மிக நெருக்கமாகப் பின் செல்லவும் பிறருக்குச் கொடையாக மாறவும் உதவுகிறது.

இது விண்ணக அரசை நமக்குத் திறந்து வைக்கின்றது. மனிதருக்கு முழு நிறைவான வாழ்வை வழங்கவும் மனிதரை இறைவாழ்வுக்கு அறிமுகம் செய்யவும் இறைமகன் வானிலிருந்து உணவாக மண்ணுலகுக்கு இறங்கிவந்தார். நாம் இயேசுவிற்காகவும் பிறருக்காகவும் வாழ்வதற்கு நற்கருணை உதவுகிறது. இந்த மாற்றம் தற்போதைய உலகுக்கு மிகவும் தேவைப்படுகிறது. மாறுவோம் மனுவுருவான இறைவார்த்தையை எம் வாழ்வாக்குவோம்.

அச்சமின்றி உறுதியாக மனச்சாட்சிப்படி வாழ்வது தர்மமாகும். இவ்வழியில் நடப்பதன் மூலமே ஒருவர் மேன்மை அடையமுடியும். -பகவத்கீதை

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கை ஆட்சியில் முட்டையில்லாத அடைக்கோழிகள்

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லையென இந்த நாட்டின் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கவலையோடு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் திஸ்ஸ விதாரண நல்ல மனிதர். எல்லா இன மக்களும் இந்த நாட்டில் உரிமையோடு வாழவேண்டும் என்பதில் உறுதியான கொள்கையைக் கொண்டவர்.

எனினும் அவர் தனது விருப்பத்தைக்கூட பகிரங்கமாகத் தெரியப்படுத்தும் திராணியைக் கொண்டிருக்கவில்லை என்பது மிகப் பெரிய துரதிர்ஷ்டம்.

அமைச்சர் திஸ்ஸ விதாரணவைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்பதில் இருவேறு கருத்தைக் கொண்டவரல்ல.

அதேநேரம் அவர் சேர்ந்திருக்கின்ற அரசோ, இனப்பிரச்சினைக்கான தீர்வை இழுத்தடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றது.

இங்குதான் நல்லவர்கள் பலவீனமானவர்களா? அல்லது பலவீனமானவர்கள் நல்லவர்களா? என்ற ஐயம் எழுகின்றது.

அதாவது அமைச்சர் திஸ்ஸ விதாரண இந்த நாட்டின் ஆட்சியில் அங்கத்துவம் கொண்ட ஓர் அமைச்சராக இருந்தும் இனப்பிரச்சினைக்கான தீர்வை அவரால் வலியுறுத்த முடியவில்லை என்பதும் வெளிப்படை.

அறிவியலில், அரசியலில், அனுபவத்தில் பழுத்த ஓர் அமைச்சர் தான் சார்ந்திருக்கும் அரசிடம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள் என்று கூறும்அளவில்அவரிடம்துணிவு இருக்கவேண்டும்.

அல்லது இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாத பட்சத்தில் எனது அமைச்சுப் பதவியை -பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறப்பேன் என்று எச்சரிக்கை செய்கின்ற அளவிலாவது அவரிடம் துணிவு இருக்க வேண்டும்.

இந்த இரண்டும் இல்லாத நிலை அவரிடம் காணப்படுகின்றது.

இங்குதான் இலங்கை அரசியலில்-ஆட்சி பீடங்களில் இருக்கக்கூடிய பலவீனங்கள் தெரிகின்றன.

எதிர்க் கட்சியில் இருக்கின்றபோது இனப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் எனக் கூறுகின்றவர்கள் ஆட்சிப் பீடம் ஏறியவுடன் தாம் கூறியவற்றை அப்படியே மறந்துபோய்விடுகின்றனர்.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றுப்போகின்றது.

இதுதவிர அரசியலில்-ஆட்சிப் பீடங்களில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் யதார்த்தத்தை உணர்ந்தவர்களாக எல்லா இன மக்களும் இந்நாட்டில் சமமாக வாழவேண்டும் என்ற விருப்பை உடையவர்களாக இருக்கின்றபோதிலும் அதனைத் துணிந்து கூறுகின்ற தைரியம் அவர்களிடம் இல்லாமல் போய்விடுகின்றது.

இதன் காரணமாக இனவாத, மதவாத சிந்தனையுடையவர்களின் நோக்கம் கனகச்சிதமாக நடந்தேறுகின்றது.

இந்த வகையில்தான் அமைச்சர் திஸ்ஸ விதாரணவும் உள்ளார்.

நல்ல மனிதராக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற சிந்தனை உடையவராக அவர் இருக்கின்றபோதிலும், அதனைப் பகிரங்கமாகக் கூறும் தைரியம் அவரிடம் இல்லாததால், அவரின் நல்ல சிந்தனைகள் முட்டை இல்லாத அடைக்கோழியின் கதையாகி விடுகின்றது.

# வடமாகாண கடற்கரை கரப்பந்தாட்டம்; வவுனியா, மன்னார் அணிகள் சம்பியன்

கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு கடற்கரை மைதானத்தில் வடமாகாண விளையாட்டுப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை அவர்கள் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது.

போட்டிக்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இலங்கையில் தேசிய மட்டப் பிரிவில் முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட கடற்கரை கரப்பந்தாட்டம் வடமாகாணத்திலும் அறிமுகப்படுத்துவது விஷேட அம்சமாகும். யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து ஆண், பெண் அணிகள் பங்குபற்றின.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியோடு யாழ். மாவட்ட அணி மோதியது. முதலாவது சுற்று இறுக்கமான சுற்றாக அமைந்தபோதும் யாழ். மாவட்ட அணி சிறப்பாக ஆடி





21:18 என்ற புள்ளியடிப்படையில் முதல் சுற்றைக் கைப்பற்றியது.

இரண்டாம் சுற்றில் பதிலடி கொடுத்து தமது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மன்னார் மாவட்ட அணி 21:14 என்ற புள்ளியடிப்படையில் இலகுவாக கைப்பற்றியது.

சம்பியன் பட்டத்தை வெல்லப்போகும் அணி எது என்பதை தீர்மானிக்கும் இறுதிச் சுற்றில் மன்னார் மாவட்ட அணி தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 15:4 என்ற புள்ளியடிப்படையில் எளிதாக கைப்பற்றி முதன் முறையாக நடத்தப்பட்ட வடமாகாண கடற்கரை கரப்பந்தாட்டத்தின் ஆண்கள் பிரிவில் சம்பியன் பட்டத்தை வென்றெடுத்தது. பெண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட அணியோடு முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது.

ஆரம்பத்திலிருந்தே தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த வவுனியா மாவட்ட அணி முதலாவது சுற்றை 21:5 என்ற கணக்கில் எளிதாக கைப்பற்றியது.

இரண்டாம் சுற்றையும் 21:13 என்ற கணக்கில் கைப்பற்றி முதன் முறையாக நடத்தப்பட்ட வடமாகாண கடற்கரை கரப்பந்தாட்டத்தின் பெண்கள் பிரிவில் சம்பியன் பட்டத்தை வென்றெடுத்தது.



அனைத்து பல்கலைக்கழகங்களுக்கிடையில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் பங்கு பற்றிய யாழ். பல்கலைக்கழக அணியினரைப் படத்தில் காணலாம்.



(வேலணை)

மாகாணமட்ட துடுப்பாட்டப்போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்ற வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய வீரர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பொறுப்பாசிரியர்களையும் அதிபரையும் படத்தில் காணலாம்.




## வலைப்பந்தாட்ட கலந்துரையாடல்

கொழும்பில் நடைபெற இருக்கின்ற 8 ஆவது ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. மேற்படி கலந்துரையாடலில் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மத்தியஸ்தர்களையும் தவறாது பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவி திருமதி ஏ.எப்.ஜே. ரூபசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## அல்வாய் நண்பர்கள், யங்கம்பன்ஸ் அணிகள் வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை லீக் இற்கு உட்பட்ட கழகங்கள் மோதின.

இப்போட்டிகள் யாவும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறுகின்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் நக்கீரன் அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் அணி மோதிக் கொண்டது. இதில் 3:3 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலையில் முடிபுற்றது. பின் பனால்டி உதைமூலம் 3:1 என்ற கோல்கணக்கில் அல்வாய் நண்பர்கள் அணி வெற்றி பெற்றது.

அடுத்த போட்டியில் நவசக்தி அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் 5:3 என்ற கோல்கணக்கில் யங்கம்பன்ஸ் அணி வெற்றி பெற்றது. (3)

# அச்சுவேலி ஸ்ரார் வி.க.கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டு கழகம் சம்பியன்

(வேலணை)

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

இக்கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. ஐந்து சுற்றுக்களைக்கொண்ட இறுதிப்போட்டியில் முதல் சுற்று பெரும் பரபரப்போடு நடைபெற்றது. இச்சுற்றில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் அபாரமாக ஆடி 25:23 என்ற புள்ளியடைப்படையில் முதல் சுற்றைத் தனதாக்கியது.

இரண்டாவது சுற்று ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் பதிலடி கொடுத்து ஆடி 25:22 என்ற புள்ளியடிப்படைட்யில் இரண்டாவது சுற்றைக்கைப்பற்றியது. மூன்றாவது சுற்றிலும் தனது ஆதிக்கத்தை செலுத்தத் தொடங்கிய ஆவரங்கால் மத்தி 25:18 என்ற புள்ளியடிப்படையில் மூன்றாவது சுற்றையும் கைப்பற்றியது. மிகவும் விறுவிறுப்பான முறையில் நடைபெற்ற நான்காம் சுற்றில் ஆவரங்கால் இந்து இளைஞர் தமது



முழுத்திறமையையும் வெளிப்படுத்தவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டனர். ஆவரங்கால் மத்தி சிறப்பாக ஆடிய போதும் ஆவரங்கால் இந்து இளைஞர் மிகச்சிறப்பாக ஆடி நான்காம் சுற்றை 26: 24 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட ஐந்தாம் சுற்றில் 15:8 என்ற புள்ளியடிப்படையில் ஐந்தாம் சுற்றை இலகுவாகக் கைப்பற்றி ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணத்தைத் தனதாக்கியது. யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் கரப்பந்தாட்ட தொடர்களிலே ஆவரங்கால் இந்து இளைஞர் அணி தொடர்ந்து சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொள்வது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச போட்டிகளிலிருந்து வி.வி.எஸ். லக்ஸ்மன் ஓய்வு!



இந்திய டெஸ்ட் அணியின் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் வி.வி.எஸ்.லக்ஸ்மன் சர்வதேச போட்டிகளில் இருந்து தனது ஓய்வினை அறிவிக்கவுள்ளதாகத் தெரிகிறது.

இதற்கான அறிவிப்பு விடுக்கப்படும் என அவருக்கு நெருக்கமானவர்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருக்காத வி.வி.எஸ். லக்ஸ்மன், கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகியிருந்தார்.

குறிப்பாக நியூசிலாந்துக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக வி.வி.எஸ். லக்ஸ்மன் தெரிவு செய்யப்பட்டமை குறித்து இந்திய கிரிக்கெட் விமர்சகர்கள் தங்களுடைய விருப்பமின்மையை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

இந்நிலையில் குறித்த கருத்துக்கள் வி.வி.எஸ். லக்ஸ்மனை பாதித்துள்ளதாகவும், இளைய வீரர் ஒருவரின் வாய்ப்பை அவர் தட்டிப் பறிக்கிறார் என்ற விமர்சனத்தின் காரணமாக இளைய வீரருக்கான வாய்ப்பை மறுத்துக் கொண்டு இருக்காமல் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வுபெற அவர் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வி.வி.எஸ். லக்ஸ்மனின் ஓய்வு தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படவுள்ள நிலையில், அவர் நியூசிலாந்துக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட தொடருக்குப் பின் ஓய்வு பெறுவாரா இல்லை முதலாவது போட்டியின் பின்னரே ஓய்வினை அறிவிப்பாரா என்ற குழப்பம் தொடர்ந்து நிலவுகின்றது.

குறிப்பாக முதலாவது போட்டி அவரது சொந்த ஊரான ஹைதராபாத்தில் இடம் பெறுவதால் இப்போட்டியின் பின்னர் அவர் ஓய்வு பெறலாம் எனக் கருதப்படுகிறது.

இதுவரை இந்திய அணி சார்பாக 134 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 45.97 என்ற சராசரியில் 8781 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இவற்றில் 17 சதங்களும் 56 அரைச் சதங்களும் உள்டங்குகின்றன.

86 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றியுள்ள அவர்,30.76 என்ற சராசரியில் 2338 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இவற்றுள் 6 சதங்களும் 10 அரைச்சதங்களும் உள்ளடங்குகின்றன.

# புனித றமழான் தினத்துக்கு அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

புனித றமழான் திருநாளை கொண்டாடும் எனது சகோதர முஸ்லிம் மக்களுக்கு எனது வாழத்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஒரு மாத காலமாக நோன்பிலிருந்து இஸ்லாத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றை நிறைவேற்றி எமது சகோதர முஸ்லிம் மக்கள் புனித றமழான் திருநாளைக் கொண்டாடுகின்றனர்.


எமது மண்ணில் முஸ்லிம் சகோதர மக்கள் விரட்டப்பட்ட ஒரு கொடிய காலகட்டம் நடந்து இருக்கிறது.

இதுகுறித்து எமது மக்கள் என்ற ரீதியில் நான் பெரிதும் வேதனைக்கு உட்பட்டிருந்தேன்.

இவ்வாறான நிகழ்வுகள் இனிமேல் எமது மண்ணில் நிகழாதிருக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டிய அவசியத்தை நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

எமது மண்ணில் நாம் அனைவரும் சமம் என்ற நிலையில் எமது வாழ்வாதார வசதிகளை மேம்படுத்தி கொள்வோமாக. அதற்காக எனது அயராத உழைப்பு என்றென்றும் துணையாக அமையும் என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது முஸ்லிம் சகோதரர்கள் இத் திருநாளை இனிதே கொண்டாட எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் வெளியிட்ட புனித றமழான் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)



சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடரில் பிரான்சின் ஜெரிமியிடம் தோல்வியுற்ற இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே.

# மன்செஸ்டர் யுனைட்டட்டில் இணைந்தார் றொபின் வான் பேர்சி

ஆர்சனல் அணியின் தலைவரான றொபின் வான் பேர்சி மன்செஸ்டர் யுனைட்ட் கழகத்தில் உத்தியோகபூர்வமாக இணைந்துள்ளார்.

றொபின் வான் பேர்சி மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்தில் இணையவுள்ளார் என ஏற்கெனவே செய்திகள் வெளியாகியிருந்த போதிலும் நேற்று முன்தினமே அவர் உத்தியோகபூர்வமாக இணைந்தார்.

ஆர்சனல் அணியின் தலைவராக செயற்பட்டு கடந்த பருவ காலத்தில் 37 கோல்களைப் பெற்றுக் கொண்ட றொபின் வான் பேர்சி, நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ள எவர்ட்டன் அணிக்கு எதிரான போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டட் சார்பான தனது அறிமுகத்தை மேற்கொள்ளவுள்ளார்.


மன்செஸ்டர் யுனைட்டட் சார்பாக றொபின் வான் பேர்சியை ஒப்பந்தம் செய்ய முடிந்தமை குறித்து கருத்துத் தெரிவித்த மன்செஸ்டர் யுனைட்டின் முகாமையாளர் அலெக்ஸ் பேர்ஹசன், றொபின் வான் பேர்சி ஒரு உலகத் தரமான வீரர் எனத் தெரிவித்தார்.

றொபின் வான் பேர்சியின் திறமைகள் குறித்து ரசிகர்களுக்கு அறிமுகம் தேவையில்லை எனத் தெரிவித்த அலெக்ஸ் பேர்ஹசன், இதற்கு முன்னர் மன்செஸ்டர் யுனைட்டட் அணிக்கெதிராக இடம்பெற்ற இறுக்கமான போட்டிகள் சிலவற்றில் அவர் அதிகளவான கோல்களைப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.



# பாகிஸ்தான் அணிக்கு பந்துவீச்சு பயிற்சியாளராக தயாராகவுள்ளேன்

## சோயப் அக்தர்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக பணியாற்ற தயாராக இருப்பதாக முன்னாள் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சோயப் அக்தர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சோயப் அக்தர் (வயது 37) வேகப் பந்து வீச்சுமூலம் ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ் என்ற பெயர் பெற்ற அக்தர் எதிரணி துடுப்பாட்ட வீரர்களைத் திணற வைத்தவர்.

காயம் காரணமாக பாதிக்கப்பட்ட அக்தர் கடந்த ஆண்டு உலகக் கிண்ணத் தொடருடன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்தார்.

இந்நிலையில் தற்போது பந்துவீச்சுப் பயிற்சியாளர் இல்லாமல் தவித்து வரும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு உதவி செய்ய அக்தர் முன்வந்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக பணியாற்ற நான் தயாராக உள்ளேன்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எனக்கு வாய்ப்பளிக்கும் பட்சத்தில் பந்துவீச்சுப் பயிற்சியாளர் பணியைச் சிறப்பாகச் செய்வேன்.

நாட்டின் அணிக்காகப் பணியாற்றுவதன் மூலம் இளம் பந்துவீச்சாளர்களை உருவாக்குவது ஒரு பெருமையான செயலாகும்.

பந்துவீச்சுப் பயிற்சியாளராக பணியாற்றுவதன் மூலம் எனது நாட்டிற்கு சேவை செய்ய எனக்கு மீண்டும் வாய்ப்புக் கிடைக்கும்.

பாகிஸ்தான் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடரில் பந்து வீச்சாளர்கள் உமர் குல் மற்றும் பிரெட்லீ ஆகியோர் இல்லாதது பெரும் இழப்பாக் கருதுகிறேன்.

இரு அணிகளிலும் முக்கிய பந்து வீச்சாளர்கள் இல்லாவிட்டாலும் ஒரு நாள் தொடர் சிறப்பாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

இத் தொடரில் பந்து வீச்சாளர்களின் பணி முக்கிய பங்கு வகிக்கும் என்றார்.

★ DS Max Marketing International Company க்கு
★ பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.
1. Distributor 2. Supervisor 3. Ass.Manager
★ தகைமை :-க.பொ.த. சாதாரண தரம் O/L
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் வயது எல்லை 18 - 40 வரை
★ 6 மாத கால பயிற்சி. பயிற்சியின் போது 8,000 - 12,000வரை பெறலாம். பயிற்சி முடிவடையும் போது 35,000 - 45,000 வரை பெற முடியும்.
குறிப்பு:- தங்குமிட வசதி இலவசம். புனர்வாழ்வு முகாம்களில் இருந்து வந்தோருக்கு முன்னுரிமை.
தொடர்புக்கு :- 077 6057421, 077-5574795
(8794)

# இந்திய அணியின் எதிர்காலம் விராட் ஹோலி கையில்!

## - கங்குலி



இந்திய கிரிக்கெட் அணியின் எதிர்காலம் இளம் வீரர் விராட் ஹோலியின் கையில்தான் உள்ளது என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் இடம்பெற்ற பள்ளிச் சிறுவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் சௌரவ் கங்குலி கலந்து கொண்டார்.

அப்போது பள்ளிச் சிறுவர்கள் கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் கங்குலி பொறுமையாக பதிலளித்தார்.



அப்போது எதிர்கால இந்திய அணியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?என்ற கேள்விக்கு பதிலளித்த கங்குலி,

இந்திய அணியில் தற்போது திறமை மிகுந்த பல இளம் வீரர்களை பார்க்க முடிகின்றது.

ஆனால் அவர்களுக்கு சர்வதேச போட்டிகளில் அனுபவம் ஏற்படும் வகையில் தொடர்ந்து வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை, இந்திய அணியின் எதிர்காலம் விராட் ஹோலியின் கையில்தான் உள்ளது என்றார்.

இந்திய அணியில் உள்ள வேகப்பந்துவீச்சாளர்களின் பந்து வீச்சில் வேகம் குறைந்து வருவது ஏன்? என்ற கேள்விக்கு அவர், சிறப்பாகக் கவனித்து இருக்கிறீர்கள் என்றும் உடற்தகுதி மற்றும் பலம் குறைவு காரணமாகவே இந்திய பந்து வீச்சாளர்களின் வேகம் குறைகிறது என்று நினைக்கிறேன் எனவும் கூறினார்.

# ஐ.நா.குழு...

தற்போது, அரசாங்கம் அதற்கு அனுமதி கொடுத்துள்ள நிலையிலேயே ஐ.நா.மனித வுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் மூன்று அதிகாரிகளைக் கொண்ட குழு அடுத்த மாதம் 14ஆம் திகதி கொழும்புவர வுள்ளது.

இந்தக் குழுவினர் வடக்குப் பகுதிகளுக்கு மட்டுமன்றி, தென்பகுதிக்கும் சென்று அங்குள்ள மனிதவுரிமை நிலை குறித்து மதிப்பீடு செய்யவுள்ளனர். (எ-11)

# கட்சிக்கு விரோதமாக...

நாயக்கவுக்கு எதிராகவே செயற்பட்டார். இதன் காரணமாக தேர்தல் பிரசார நடவடிக்கையின் போது மைத்திரி பாலவுக்கு எவ்விதமான பொறுப்புக்களும் வழங்கப்படவில்லை.

அநுர பண்டாரநாயக்கவுக்கு ஒத்துழைப்பு வழங்கி கட்சியை இரண்டாகப் பிளவடையச் செய்யும் நோக்கிலேயே மைத்திரிபால செயற்பட்டார்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது கட்சியின் பொதுச் செயலாளராக செயற்பட்ட போதிலும் மௌனமான அணுகு முறையையே மைத்திரிபால பின்பற்றினார்.

தேர்தலின் போது ஐக்கிய தேசியக்கட்சியுடன் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியவர்கள் பற்றிய தகவல்களை தேவையென்றால் வெளியிட முடியும் என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது சந்திரிகாவிற்கு, ரணில் உளவுத் தகவல்களை வழங்கியிருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார். (எ-2,11)

# ஜனாதிபதி மகிந்த...

அடுத்தமாதம் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசுவதற்கான வாய்ப்பு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கிடைக்காதது ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஊடகங்களில் நேற்று முன்தினம் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந் நிலையில், இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி செயலக வட்டாரங்கள், ஈரான் தலை நகர் தெஹ்ரானில் வரும் 26ஆம் திகதி அணிசேரா நாடுகளின் மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

இந்த மாநாட்டில், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பங்கேற்கிறார். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இதில் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த மாநாட்டின் போது இவர்கள் இருவரும் தனியாகச் சந்தித்துக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இந்தச் சந்திப்பு நடக்குமா என்பதை, அறுதியிட்டுக் கூற அந்த வட்டாரங்கள் மறுத்துள்ளனர்.

இந்தியத்தரப்பிலும் இது குறித்த தகவல் ஏதும் வெளியாகவில்லை. இதேவேளை இச் சந்திப்பில் டெசோ மாநாடு பற்றிய விளக்கம் கோரப்படும் என அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-11)

# தேர்தல் ஆணையா...

தேர்தல் நடவடிக்கைகள் மற்றும் இடம்பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கட்சிகளிலேயே ஏற்பட்ட கலவரங்கள் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டுள்ளது.

இதவேளை மருதமுனை நகரில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இப்தார் நிகழ்வுகள் இரண்டிற்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புகள் அளிக்கப்பட்டிருந்தன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் மற்றும் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அத்தாவுல்லா ஆகியோர் குறித்த இரண்டு நிகழ்வுகளிலும் கலந்துகொள்ள விருந்தமையே இதற்கு காரணமாகும். (எ-11)

# யாழில் இசைப்பாடசாலை உன்னி கிருஷ்ணன் விருப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இசைத்துறையை வளர்தெடுக்க பாடசாலையொன்று அமைக்க விருப்பம் உள்ளது என இந்திய திரைஇசைப் பாடகரும், கர்நாடக இசைப் பாடகருமான ஸ்ரீ.பி.உன்னி கிருஷ்ணன் தெரிவித்தார்.

யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் இசைத்துறையினை விருத்தி செய்வதற்கு கலைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கவும் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்திலுள்ள இசை ஆர்வம் கொண்டவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இங்கு வந்தேன்.

இங்கு இசைத்துறையை விருத்தி செய்யவும், கர்நாடக இசையை முறையாக பயிற்றுவிக்கவும் எதிர்காலத்தில் பாடசாலை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பேன் என்றார் அவர். (எ-6)

# ஜனாதிபதி மகி...

புலிஆதரவாளர்கள் முயற்சிஎடுத்து வருகின்றனர்.

நாடுகடந்த தமிழீழ இராச்சியத்தின் பிரதமர் உருத்திரகுமாரன், ஜனாதிபதிக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் மின் அஞ்சல் மூலம் புலி ஆதரவாளர்கள் மத்தியில் பிரசாரம் செய்து வருவதாக திவயின குற்றம் சுமத்தியுள்ளது. (எ-2,11)

# தமிழருக்கு அதிகாரத்...

தீர்மானத்தினால் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காக கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்ற வேண்டும் என இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர்கள் பகிரங்கமாக கூறிவருவது மட்டுமன்றி அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதனை தமிழ் மக்கள் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது இந் நிலையில் நடைபெறவுள்ள தேர்தலில் அதனை அனுமதிக்கப் போகிறோமா? அல்லது சர்வதேச சமூகத்தின் தமிழர்களுக்கான ஆதரவு சிந்தனையை பலவீனப்படுத்தப் போகின்றோமா? என்பதை தீர்மானிக்க வேண்டியவர்களாக கிழக்கு மாகாண மக்கள் இருக்கின்றார்கள்.

எமது மக்கள் தங்கள் பாரம்பரிய வாழ்விடங்களில் தங்களை தாங்களே ஆளக் கூடிய சுயாட்சியுடனான அரசியல் தீர்வை அடைய வேண்டும் என்பதில் இன்னும் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் உள்ளார்களா? என்பதை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது.

இதனை சர்வதேச சமூகம் எமக்கு தெரிவித்துள்ளது. இந்நிலையில் இத் தேர்தலில் 95 சதவீதமான தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பதன் மூலம் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்ற முடியும். அதுமட்டுமன்றி உரிமைப் போராட்டத்தில் தமிழர்கள் எத்தகைய இழப்புக்களைச் சந்தித்தாலும் உறுதியுடனும் வைராக்கியத்துடனும் தொடர்ந்தும் இருக்கிறார்கள் என்பதை சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டக் கூடியதாய் இருக்கும்.

தமிழ் மக்களை பொறுத்த வரை இனப் பிரச்சினைக்கு தீர்வாக நிலைத்து நிற்கக் கூடிய நியாயமான நடைமுறைப் படுத்தக் கூடிய அரசியல் தீர்வொன்றையே எதிர்பார்க்கின்றார்கள்.

இதனையே சர்வதேச சமூகமும் வலியுறுத்துகிறது. இந் நிலையில் இந்த தேர்தலில் தமிழ் மக்கள் எடுக்கும் முடிவு சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பை பலவீனப்படுத்துவதாக அமைந்து விடாமல் பலப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தல் கடவுளினால் எமக்கு தரப்பட்ட இறுதிச் சந்தர்ப்பம். இதில் நீதிநியாயத்தில் நாம் வெற்றியீட்ட வேண்டும் என்பது கடவுளின் விருப்பமாகவுள்ளது என்றார். (எ-11)

# ஒரேகுடும்பத்தை...

இச்சம்பவத்தில் மரணமானவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் தற்கொலை செய்து கொண்டார்களா? அல்லது கொலை செய்யப்பட்டார்களா? என்ற ரீதியில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். ஹட்டன் கொட்டகலை பகுதியைச் சேர்ந்த அவர்கள் மூவரையும், குடும்பத்தின் மூத்த மகன் சில தினங்களுக்கு முன்னர் கொழும்புக்கு அழைத்து வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து துர்நாற்றம் வந்ததையடுத்து அயலவர்கள் பொலிஸாருக்கு தெரிவித்ததன் பின்னரே பொலிஸார்; இச்சடலங்களை மீட்டுள்ளனர். சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு நீதிமன்ற நீதிவான் விஜயம் செய்து பார்வையிட்டுள்ளதுடன், விசாரணை அதிகாரிகளும் அங்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளனர். எனினும் அவர்களை அழைத்து வந்த மூத்த மகனின் தகவல்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கில் வெள்ளவத்தை பொலிஸாரும், கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரும், அடங்கிய இரண்டு குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (எ-8)


மாபெரும் விசேட விலைக்கழிவு

**Jet D Express Courier Service**




*உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய*

| | | |
|---|---|---|
| France | Over5kg 1000/= | Over11kg 750/= |
| Germany | Over5kg 1100/= | Over 11kg 850/= |
| London | Over 5kg 1000/= | Over 11kg 750/= |
| Australia | Over 5kg 1100/= | Over 11g 850/= |
| Netharland | Over 5kg 1100/= | Over 11kg 850/= |
| Swiss | Over 5kg 1500/= | Over 11kg 950/= |
| Denmark | Over 5kg 1200/= | Over 11kg 850/= |

Note: 25kg மேற்பட்ட பெதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு விசேட கட்டணச்சலுகையுடன் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்படும்



Note : * கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும் வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இல 27, முதலாம் மாடி,
நவீன சந்தை. [தனம்ரெக்ஸ் மேல்]
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150, 0772187 301

No: 77E. Manning Place,
Wellawatta, Colombo 06,
T.P:- 0112363873
0776509909
(சி-787)

**வாகனங்கள் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.
ரிப்பர்-LK-XXXX - 3150000/-
டக்டர் (England) பெட்டியுடன் - XXXX - 1350000/-
மோட்டார் சைக்கிள் (பஜாஜ் பொக்ஸ்ஸர்) - VI - XXXX - 75000/-
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு :- 0774182447
0773667998
(228)

**YOGI'S** Academy of Beauty Culture, Hair Dressing & Home Science

**EXHIBITION** | Cake and Sugar Craft

கேக் கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல் (Seminar) 26.08.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது. என்னிடம் கேக் Icing பயிற்சியை முடித்த மாணவிகள் அனைவரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இதில் கலந்துகொள்ளும் மாணவிகள் அனைவரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி : 021 2222796
0777164923 (சி-786)

ஆசிரியை :
Mrs.Yogini Shanmuganathan

**தேவை**

யாழ். நகரில் பிரபல Tiles விற்பனை நிறுவனத்துக்கு Sales Representatives, Store Keepers தேவை. அனுபவ மற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். (சி-788)

Ranjanas CERAMIC — No,212 Palaly Road, Jaffna — E-mail : Suren@metrohomes.lk

**வீடு வாடகைக்கு தேவை**

நல்லூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வீடு வாடகைக்கு தேவையாகவுள்ளது.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி இலக்கம் :-
0777902974
(239)

**விற்பனைக்கு**

84 சிறி சிவப்பு நிற CD 200 மோட்டார் சைக்கிள், 4500 Km ஓடிய கறுப்புநிற Pulser 150, புத்தம் புதிய 2011 மொடல் wpxJ நம்பர் மோட்டார் சைக்கிள் ஆகிய இரண்டு மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 0774050936



(238)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.